## அல்லாஹ்வின் கட்டளை

وَمَنۡ يَّعۡمَلۡ مِنَ الصّٰلِحٰتِ مِنۡ ذَكَرٍ اَوۡ اُنۡثٰى وَهُوَ مُؤۡمِنٌ فَاُولٰٓـئِكَ يَدۡخُلُوۡنَ الۡجَـنَّةَ وَلَا يُظۡلَمُوۡنَ نَقِيۡرًا

நம்பிக்கையாளரென்ற நிலையில் நற்செயல்களைச் செய்பவர்கள், ஆணாயினும், பெண்ணாயினும் சொர்க்கத்தில் நுழைவார்கள். அவர்களுக்கு இம்மியளவும் அநீதியிழைக்கப்பட மாட்டாது.

(4:125)


بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

தொகுதி 7

இதழ் 6

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

08 ரஜப் 1443 ஹிஜ்ரி கமரி 10 தப்லீக் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி 10 பிப்ரவரி 2022


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## அஹ்மதிய்யத்தின் தலைமையகம் தாருல் அமான் காதியானில் 126 வது ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடந்து முடிந்தது

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் MTA தொலைக்காட்சி மூலம் ஆற்றிய அருளுக்குரிய மாநாட்டு நிறைவுரை

*♦ கோவிட் தொற்றானது உள்ளங்களின் அழுக்குகளை நீக்கவில்லை. இந்த எச்சரிக்கையிலிருந்து மனிதன் எந்த படிப்பினையும் பெறவில்லை. இதே நிலை தொடர்ந்தால் பின்னர் மாபெரும் அபாயகரமான விளைவுகள் வெளிப்படும்*

*♦ இன்று இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளின் சில அம்சங்களை எடுத்துரைப்பேன். அதன்படி செயல்பட்டால் பின்னர் உலகம் அமைதிப்பூங்காவாக மாறி விடும்*

*♦ ஒருவர் மற்றவரின் மார்க்கத்தின் தோற்றுநரை தவறானவராக குறிப்பிட்டு அவர் மீது பழி சுமத்தக் கூடாது என்று இஸ்லாம் கூறுகின்றது. மற்ற அனைத்து மார்க்கங்களும் பொய்யானவையாக இருந்தன என்று இஸ்லாம் கூறவில்லை. எல்லா சமுதாயங்களிலும் தூதர் வந்ததாக இஸ்லாம் கூறுகின்றது. மேலும் وَاِنۡ مِّنۡ اُمَّةٍ اِلَّا خَلَا فِيۡهَا نَذِيۡرٌ என்ற வசனத்தின் ஒளியில் ஒரு முஸ்லிம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களையும், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களையும் அல்லது இந்துக்களின் அவதாரங்களையும் கண்ணியத்துடன் பார்க்க வேண்டும் என்றும் இஸ்லாம் கூ றுகின்றது*

*♦ ஒவ்வொரு மார்க்கத்தின் தோற்றுநருக்கும் கண்ணியம் வழங்க வேண்டும். மேலும் எல்லா மார்க்கத்தை பின்பற்றக் கூடியவர்களுக்கும் கண்ணியம் வழங்க வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது*

*♦ இஸ்லாம் தீவிரவாத மார்க்கம் என்றும், பலவந்தமாக மக்கள் முஸ்லிம்களாக ஆக்கப்பட்டு விட்டனர் என்றும் இஸ்லாத்தைக் குறித்து ஒரு தவறான சித்திரம் நிலைநாட்டப்பட்டுள்ளது. உண்மையில் இஸ்லாம் அதனை மறுக்கின்றது*

*♦ இஸ்லாம் இந்த உலகத்தில் தன்னை ஏற்காததன் காரணமாக எவருக்கும் தண்டனை வழங்கவில்லை. இன்றும் முஸ்லிம்களின் செயல் இந்த போதனைக்கு ஏற்புடையதாக அமைந்து விட்டால் பின்னர் உலகத்திற்கு இஸ்லாத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டு விடும்*

*♦ தண்டனை வழங்குவதால் சீர்திருத்தம் ஏற்படுமா? அல்லது மன்னிப்பதால் சீர்திருத்தம் ஏற்படுமா? என்று பார்க்க வேண்டும். சீர்திருத்தம் நோக்கமாக இருக்க வேண்டும்*

*♦ எல்லா வகையான கொடுக்கல் வாங்கலிலும் ஒருவர் மற்றவரின் உரிமைகளை கருத்தில் கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது*

*♦ தற்பெருமை கொள்ளாதீர்கள். மக்களை ஏளனமாகவும், இழிவாகவும் கருதாதீர்கள். ஆணவம் கொண்டு எவரும் எந்த உயர் அந்தஸ்தையும் அடைய முடியாது என்றும் இஸ்லாம் கூறுகின்றது. பணிவு தான் உண்மையான தலைமைத்துவத்தை வழங்குகின்றது. இந்த தலைமைத்துவம் தான் நிரந்தரமாக அமைதியை நிலைநாட்டக் கூடியதாக ஆக முடியும்*

*♦ ஜல்ஸாவின் அருட்களையும் அதில் பங்கு பெற்றவர்கள் தன்னுடன் எடுத்துச் செல்ல வேண்டும். உலகில் எல்லா இடங்களிலும் இந்த நிகழ்ச்சியை கேட்கக் கூடியவர்கள் ஓர் உத்வேகத்தையும், உணர்வையும் தன்னுள் ஏற்படுத்திக் கொள்பவர்களாக இருக்க வேண்டும். மேலும் தமது பகுதிகளில் இஸ்லாத்தின் தூய போதனைகளின் ஒளியில் ஒரு புரட்சியை ஏற்படுத்தக் கூடியவர்களாக ஆகி விட வேண்டும் – ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்)*

---

கோவிட் சூழ்நிலையின் காரணமாக ஹுஸூர் அன்வர் அவர்களின் வழிகாட்டல் மற்றும் அரசாங்கத்தின் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு இந்த ஜல்ஸா நடைபெற்றது. ஆயினும் நேரடி ஒளிபரப்பின் மூலமாக ஜல்ஸாவிலிருந்து பெரும் அளவில் பயன் பெறப்பட்டது. நேரடி ஒளிபரப்பின் மூலமாக **1,06,646** நபர்கள் ஜல்ஸாவை பார்க்கவும், கேட்கவும் செய்துள்ளனர். **6** தேசிய மொழிகளில் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகள் மொழியாக்கம் செய்யப்பட்டன. மார்க்க அறிஞர்கள் சொற்பொழிவு ஆற்றினர். ஜமாஅத் உறுப்பினர்களின் அறிவாற்றலை மேம்படுத்துவதற்காக தர்பிய்யத் அம்சங்களைக் கொண்ட ஆவண படங்கள் ஒளிபரப்பப்பட்டன. பல நிக்காஹ் அறிவிப்புகள் செய்யப்பட்டன. அச்சு மற்றும் காட்சி ஊடகங்களில் ஜல்ஸாவின் செய்திகள் வெளியாகியுள்ளன. மிக நிம்மதியான, மகிழ்ச்சிகரமான கால நிலையில் ஜல்ஸாவின் அனைத்து நிகழ்ச்சிகளும் நடந்து முடிந்தன

---

### நிறைவுப் பகுதி

டிசம்பர் **22** ஆம் தேதி முதல் டிசம்பர் **28** ஆம் தேதி வரை மஸ்ஜித் அக்ஸா மற்றும் மஸ்ஜித் அன்வாரில் ஜல்ஸாவின் மூன்று நாட்களிலும் காதியானின் அனைத்து பள்ளிவாசல்களிலும் ஜமாஅத் அளவிலான தஹஜ்ஜுத் தொழுகைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தஹஜ்ஜுத் தொழுகைக்கு முன்பாக தர்பிய்யத் துறை சார்பாக ஒலிபெருக்கி மூலம் ஸலவாத் ஓதியும், தூய கவிதைகள் படிக்கப்பட்டும் தஹஜ்ஜுத் தொழுகைக்காக ஜமாஅத் சகோதரர்கள் எழுப்பப்பட்டார்கள். ஃபஜர் தொழுகைக்குப் பிறகு தஃப்ஸீரே கபீரிலிருந்து திருக்குர்ஆன் தர்ஸ் வழங்கப்பட்டது. காதியானின் அனைத்து வீதிகளிலும், மாநாட்டுத் திடலிலும் தர்பிய்யத் தொடர்பான பேனர்கள் வைக்கப்பட்டன.

வானிலைதுறை சார்பாக டிசம்பர் **26, 2021** ஆம் தேதி மழைக்கான முன்னிறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. இரண்டாவது அமர்வில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நிறைவுரை நேரடியாக ஒளிபரப்பு ஆக இருந்தது. எனவே மிகுந்த கவலையும், வேதனையும் ஏற்பட்டது. ஆதலால் முதல் அமர்வின் அறிக்கை அனுப்பும்போது கால நிலை சீராக இருப்பதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் துஆவிற்காக விண்ணப்பிக்கப்பட்டது. ஹுஸூர் அவர்களின் துஆக்களினால் அல்லாஹ் காலநிலையை சீராக வைத்தான். மழை பெய்யவில்லை. அதன் மூலம் மாநாட்டுத் திடல் முழுமையாக நிறைந்திருந்தது. கலந்து கொண்டவர்கள் மிக கவனமாக ஹுஸூர் அவர்களின் நிறைவுரையை கேட்டனர். அல்ஹம்துலில்லாஹ்.

அல்லாஹ் இந்த ஜல்ஸாவை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. மேலும் அனைத்து ஊழியர்களுக்கும் தொண்டாற்றியவர்களுக்கும் மேலான நற்கூலியை வழங்குவானாக. (அறிக்கை: மன்ஸூர் அஹ்மது மஸ்ரூர்)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**வக்ஃபே ஜதீத் சந்தாவின் 65 ஆம் நிதியாண்டிற்கான அறிவிப்பு – உலகம் முழுவதும் வசிக்கின்ற அஹ்மதிகளின் பொருள் தியாகங்கள் தொடர்பான நற்குறிப்புகள்**

**அல்லாஹ் நமது உள்ளங்களின் நிலையை அறிகின்றான். நமது எண்ணங்களை அறிகின்றான். எனவே ஒருவர் பெரும் தியாகங்களை செய்துள்ளாரா? அல்லது தியாகம் செய்துள்ளாரா? பெரிய தொகை கொடுத்துள்ளாரா? சிறிய தொகை கொடுத்துள்ளாரா? என்று அவன் பார்ப்பதில்லை. மாறாக, அல்லாஹ் எண்ணங்களுக்கேற்ப நற்கூலி வழங்குகின்றான்**

**நமது செயல்களின் மீது அல்லாஹ்வின் பார்வை உள்ளது. நாம் என்ன பணிகளை செய்தாலும் இறைவனின் திருப்தியை பெறுவதற்காகவே செய்ய வேண்டும் என்ற இந்த நோக்கத்தை நாம் எப்போதும் நம் கண் முன் நிறுத்திக் கொள்ள வேண்டும். எனவே இந்த சிந்தனை மனிதனுக்கு வந்து விட்டால் பின்னர் அப்போது தான் மனிதன் அல்லாஹ்வின் உண்மையான அருட்களுக்கு வாரிசாக முடியும்**

**அல்லாஹ்வின் அருளால் கடந்த வருட நிதியாண்டு 64 ஆம் ஆண்டாக இருந்தது. இந்த வருடம் ஜனவரி 2022 ல் புதிய வருடமும் ஆரம்பமாகி விட்டது**

**இந்த நிதியாண்டில் ஜமாஅத்தின் வக்ஃபே ஜதீதின் தியாகம் என்பது 1,12,70,000 பவுண்ட் அல்லது சுமார் 11.2 மில்லியன் ஆகும். இது முந்தைய ஆண்டை காட்டிலும் இந்த (முறை) பொருள் தியாகம் 7,42,000 பவுண்ட் கூடுதலாகும்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 07 ஜனவரி 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு **சுலஹ்** மாதம் **07 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

وَمَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمُ ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ

وَتَثْبِيْتًا مِّنْ أَنْفُسِهِمْ كَمَثَلِ جَنَّةٍ بِرَبْوَةٍ أَصَابَهَا وَابِلٌ فَاٰتَتْ

فَطَلٌّ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ

இதன் பொருள் இவ்வாறாகும்: தங்களுடைய செல்வத்தை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறவும், தங்களைத் தாங்களே உறுதிப்படுத்திக் கொள்ளவும் செலவு செய்பவர்களின் உதாரணம் உயரமான இடத்திலுள்ள ஒரு தோட்டத்திற்கு ஒப்பானது. அதன் மீது பெருமழை பொழிகின்றபோது அது தனது கனியை இரு மடங்காக தருகின்றது. மேலும் அதன் மீது பெருமழை பெய்யவில்லையாயினும் மிகவும் குறைவான மழையே அதற்கு போதுமானது. நீங்கள் செய்து கொண்டிருப்பதை அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

இந்த வசனத்தில் அல்லாஹ்வின் வழியில் அல்லாஹ்வின் திருப்தியை பெற வேண்டும் என்ற ஆசையில் செலவிடுகின்ற நம்பிக்கையாளர்களின் நிலையை அல்லாஹ் இவ்வாறு படம்பிடித்துள்ளான். அல்லாஹ்வின் வழியில் செலவிடுகின்ற மக்கள் ஏன் செலவிடுகின்றார்கள் என்றால் ஒன்று, அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப அவனது வழியில் செலவு செய்து அவனது திருப்தியைப் பெற்றவர்களாக ஆக வேண்டும் என்பதற்காக நம்பிக்கையாளர்கள் செலவு செய்கின்றனர். இரண்டாவதாக, தமது சமுதாயம் மற்றும் தமது நோக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக செலவு செய்கின்றனர்.

இக்காலத்தில் இஸ்லாத்தின் போதனை மற்றும் பிரச்சாரத்தை பரப்புகின்ற பணி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மிஷனை முழுமை செய்வதற்காக உயிரையும், செல்வத்தையும், நேரத்தையும் தியாகம் செய்வது அன்னார் (அலை) அவர்களை ஒப்புக் கொண்டவர்கள் மீது கடமையாகும். எல்லாக் காலத்திலும், எல்லா சமுதாயத்திலும் தோன்றக் கூடிய நபிமார்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களிடம் பொருள் தியாகத்திற்கான அறிவுறுத்தலை செய்து வந்துள்ளார்கள். நீங்கள் மார்க்க தொண்டிற்காக மார்க்கத்தின் வழியில் தமது செல்வத்தின் சிறிய பகுதியை கொடுக்க வேண்டும். அப்போதுதான் உண்மையான ஈமானைப் பற்றி தெரிய வரும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

நிச்சயமாக நம்பிக்கையாளர் மார்க்கத்திற்காக பொருள் தியாகம் செய்கின்றார். மேலும் அந்த தியாகங்களின் நோக்கம் எவர் மீதும் உபகாரம் செய்வதாக அமைவதில்லை. மாறாக, நமது இறைவன் எப்படியாவது நம் மீது திருப்தி கொண்டு விட வேண்டும். மேலும் தமது ஈமான் உறுதிப்பட வேண்டும். நாம் நமது ஈமானிலும், உறுதியிலும் வலிமை அடைய வேண்டும். நமது சமுதாயம் முன்னேறக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதே ஆசையாக இருக்கின்றது. நம்மால் எந்த அளவிற்கு சாத்தியமோ நாம் நமது செல்வத்திலிருந்தும் பலவீனமானவர்களை வலிமை பெறச் செய்ய வேண்டும் என்றும் ஆசை கொள்கின்றனர். எந்த நோக்கத்திற்காக நாம் இக்காலத்தின் இமாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரிடம் பைஅத் செய்துள்ளோமோ அதனை நாம் முழுமை செய்யக் கூடியவர்களாக ஆக வேண்டும் என்ற ஆசையிலும் செலவு செய்கின்றனர்.

எனவே இது போன்ற மக்கள் மன இச்சைகளிலிருந்து விலகி சிந்திக்கின்றனர். அவர்களின் மனம் அவர்களை தியாகம் செய்து அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதன் பக்கம் கவனமூட்டுகின்றது. பின்னர் அவர்கள் தியாகங்களின் உயர் அந்தஸ்தை பெறுகின்றனர் அல்லது உயர் அந்தஸ்தை பெறுவதற்கு முயற்சி செய்கின்றனர். பின்னர் அல்லாஹ்வும் அதுபோன்ற மக்களின் தியாகங்களை ஒப்புக் கொள்கின்றான். மேலும் அவர்களுக்கு தனது அருட்களை வழங்குகின்றான்.

அல்லாஹ் நமது உள்ளங்களின் நிலையை அறிகின்றான். நமது எண்ணங்களை அறிகின்றான். எனவே ஒருவர் பெரும் தியாகங்களை செய்துள்ளாரா? அல்லது தியாகம் செய்துள்ளாரா? பெரிய தொகை கொடுத்துள்ளாரா? சிறிய தொகை கொடுத்துள்ளாரா? என்று அவன் பார்ப்பதில்லை. மாறாக, அல்லாஹ் எண்ணங்களுக்கேற்ப நற்கூலி வழங்குகின்றான்.

எனவே இந்த வசனத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: அல்லாஹ்விற்காக செலவிடுகின்றவர்களின் உதாரணம் இரண்டு வகைப்படும். ஒன்று, பெருமழை. அதாவது பெரும் துளிகளை பொழியக் கூடிய வேகமான மழை. இரண்டாவதாக, சிறு மழை. அதாவது லேசான மழை. அதிக செழிப்பையுடையவர் மார்க்கத்திற்காக மிகவும் செலவிடுகின்றார். ஆனால் இவர் செலவு செய்து பொருள் தியாகத்தில் முன்னேறுகின்றார். அதாவது செல்வந்தர் பெரும் பெரும் தொகையை கொடுத்து அல்லாஹ்வின் திருப்தியை பெறக் கூடியவராக ஆகிக் கொண்டிருக்கின்றார். மேலும் அவனது நெருக்கத்தை பெறக் கூடியவராக ஆகி விட்டார். அல்லது ஆகுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றார். அல்லது ஆகி விடுவார். ஆனால் என்னிடத்திலோ மிகச் சாதாரண தொகையே உள்ளது. நான் எப்படி அவருக்கு சமமாக ஆக முடியும் என்று ஓர் ஏழை நபர் ஏக்கத்துடன் இவ்வாறு எண்ணக் கூடும்.

எனவே அல்லாஹ் கூறுகின்றான்: நல்ல விளை நிலம் சிறு மழை அல்லது பனியின் மூலம் பயன் பெறுவதைப் போன்று செல்வ செழிப்பு படைத்திராத மனிதன் செய்கின்ற சிறிய தியாகம் கூட தல் எனும் சிறு மழையின் அந்தஸ்தை பெற்றுள்ளது. கனிகளை பெற்றுத் தருவதில் அது குறைந்த

அந்தஸ்தை உடையதாக இருக்காது. தியாகங்களுக்கு கனிகளை வழங்கக் கூடியவன் அல்லாஹ் ஆவான். ஒவ்வொரு செயலுக்கும் அல்லாஹ்வே கனியை வழங்குகின்றான். பின்னர் அல்லாஹ் உங்களது நிலைகளையும், உங்களது எண்ணங்களையும் அறிகின்றான். எனவே அவன் சிறிய தியாகங்களுக்கும் கனி வழங்குகின்றான். இன்னும் கூறப்போனால் அதிகமான நற்கூலி கூட வழங்கலாம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இன்று ஒரு திர்ஹம் ஒரு லட்சம் திர்ஹமை விட முன்னிலை பெற்று விடும் என்று கூறினார்கள். அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல) அவர்களே! அது எப்படி? என்று சஹாபிகள் கூறினர். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஒரு நபரிடம் இரண்டு திர்ஹம் இருந்தது. அவர் அதிலிருந்து ஒரு திர்ஹமை இறைவழியில் பொருள் தியாகம் செய்து விட்டார். மற்றொரு நபரிடம் எண்ணற்ற செல்வங்களும், சொத்துகளும் இருந்தன. அவர் அவற்றிலிருந்து ஒரு லட்சம் திர்ஹமை பொருள் தியாகம் செய்தார் என்று கூறினார்கள்.

(சுனன் நிஸாயி, கிதாபுஸ் ஸகாத் ஹதீஸ் எண் 2528)

ஒரு லட்சம் திர்ஹம் தியாகத்துடன் ஒப்பிடும்போது ஒரு திர்ஹம் தியாகம் என்பது மிகக் குறைவாக இருந்தது. எனவே அல்லாஹ் எண்ணங்களுக்கேற்பவே கனி வழங்குகின்றான். நிலைமைகளுக்கேற்ப செய்யப்பட்ட செயல்களுக்கு கனி வழங்குகின்றான். இவ்வாறு ஏழைகளுக்கும் ஆறுதல் வழங்கி விட்டான். அதாவது உங்களது குறைவான தியாகத்திற்கு எந்த அந்தஸ்தும் இல்லை என்று எண்ணம் கொள்ளாதீர்கள். மாறாக, அந்த சிறிய தியாகம் கூட எங்கு உங்களது ஈமானை வலிமைப்படுத்தக் கூடியதாக இருக்கின்றதோ அங்கு ஜமாஅத்தின் உறுதிப்பாட்டிற்கும் அது ஏற்பாடு செய்கின்றது. எனவே அல்லாஹ்விற்காக ஓர் உத்வேகத்துடன் வழங்கப்பட்ட தியாகங்களே அல்லாஹ்வின் அருட்களை ஈர்க்கின்றன. நமது செயல்களின் மீது அல்லாஹ்வின் பார்வை உள்ளது. நாம் என்ன பணிகளை செய்தாலும் இறைவனின் திருப்தியை பெறுவதற்காகவே செய்ய வேண்டும் என்ற இந்த நோக்கத்தை நாம் எப்போதும் நம் கண் முன் நிறுத்திக் கொள்ள வேண்டும். எனவே இந்த சிந்தனை மனிதனுக்கு வந்து விட்டால் பின்னர் அப்போது தான் மனிதன் அல்லாஹ்வின் உண்மையான அருட்களுக்கு வாரிசாக முடியும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் அன்னார் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட மக்கள் பெரும்பாலும் ஏழைகளாக இருந்தனர். ஆயினும் தியாகங்களில் எந்த அளவுக்கு முன்னேறி இருந்தார்கள் என்றால் ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்த மக்களை பாராட்டியவாறு இவ்வாறு கூறினார்கள்:

நான் பார்க்கின்றேன். நூற்றுக்கணக்கான மக்கள் எப்படிப்பட்டவர்களாக எமது ஜமாஅத்தில் நுழைந்துள்ளார்கள் என்றால் அவர்களது உடலில் மிக அரிதாகவே உடை கூட இருக்கின்றது. மிகவும் கஷ்டத்துடன் போர்வை அல்லது கீழாடை அவர்களுக்கு கிடைக்கின்றது. அவர்களுக்கு எந்த சொத்தும் இல்லை. ஆனால் அவர்களின் எல்லையற்ற கலப்படமற்ற தன்மையும், தூய எண்ணமும், அன்பும், நன்றியுணர்வும் இயல்பில் ஓர் ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றது. அதனை அவர்கள் அவ்வப்போது வெளிப்படுத்தி வருகின்றனர். அல்லது அதன் தாக்கங்கள் அவர்களது முகங்களில் வெளிப்படுகின்றன. அவர்கள் தமது ஈமானில் எந்த அளவிற்கு உறுதியானவர்களாகவும், உண்மையாளர்களாகவும், நன்றியுணர்வு மிக்கவர்களாகவும் இருக்கின்றார்கள் என்றால் ஒருவேளை உலக செல்வந்தர்களும், இந்த உலகியல் இன்பத்தை புகழ்பவர்களும் இவர்களின் நிலைகளை அறிந்து கொண்டால் அதனைப் பொறுவதற்காக தம்மிடமுள்ள எல்லாவற்றையும் கொடுப்பதற்கு தயாராகி விடுவார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 306, 307)

மற்றோரிடத்தில் அன்னார் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இந்த ஜமாஅத் கலப்படமற்ற தன்மையிலும், நேசத்திலும் மகத்தான முன்னேற்றம் அடைந்துள்ளதை நாம் பார்க்கின்றோம். சில நேரங்களில் ஜமாஅத்தின் தூய்மை, நேசம் மற்றும் ஈமானிய உணர்வைக் கண்டு நாம் சுயமே ஆச்சரியத்திற்கு உள்ளாகி விடுகின்றோம். மேலும் எதிரியும் கூட ஆச்சரியம் அடைகின்றான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 334)

எனவே நன்றியுணர்வு மற்றும் தூய்மையில் முன்னேற்றம் மற்றும் ஈமானிய உணர்வின் அசாதாரண தரம் எப்படிப்பட்டதாக இருக்கின்றதென்றால் அதன் செயல் வெளிப்பாடு இன்றும் கூட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத் உறுப்பினர்களிடத்தில் நமக்கு காண கிடைக்கின்றது. இன்னும் கூறப்போனால், தூய்மை மற்றும் நன்றியுணர்வில் புதிய அஹ்மதிகள் கூட முன்னேறியுள்ளனர். தற்போது அவர்களுக்கு தர்பிய்யத் கிடைத்து சிறிது காலமே ஆகின்றது. இருந்தபோதிலும் இந்த குறுகிய காலத்தில் அவர்கள் பெரும் முன்னேற்றத்தை அடைந்துள்ளதைப் பார்த்து ஆச்சரியம் ஏற்படுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பருடன் அன்பிற்கான தொடர்பு, கிலாஃபத்துடனான நன்றியுணர்வு மற்றும் தூய்மையில் அவர்களின் தரம் எப்படிப்பட்டதாக உள்ளது என்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதைப் போன்று, இவர்களிடத்தில் இந்த மாறுதலை ஏற்படுத்திய அந்த விஷயம் என்ன? என்று எதிரியும் கூட ஆச்சரியம் கொள்கின்றான். இது அவர்களின் மீது நிச்சயம் அல்லாஹ் செய்த சிறப்பான அருளாகும். அல்லாஹ் நல்லியல்பு படைத்த மற்றும் நற்பேறு பெற்ற மக்களைக் கண்டு அவர்கள் மீது இதுபோன்ற அருட்களை செய்கின்றான்.

இந்த நல்லியல்பு மற்றும் பைஅத்தின் உரிமையை செலுத்துவதன் வெளிப்பாடு மற்றும் காலத்தின் கலீஃபாவுடனான நன்றியுணர்வு மிக்க தொடர்பின் வெளிப்பாடு அந்த மக்களின் சொல் மற்றும் செயலிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்று உலகம் பௌதீகத்தில் மூழ்கிக் கிடக்கின்றது. ஆனால் இந்த மக்கள் பொருள் தியாகம் செய்து அல்லாஹ்வின் திருப்தியை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் ஒருவர் மற்றவரை விட முன்னேறுவதற்கு முயற்சி செய்கின்றனர். ஏனென்றால் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கான வழிமுறைகளில் அல்லாஹ்வின் வழியில் செலவிடுவதும் ஒன்றாகும் என்ற ஞானம் அவர்களுக்கு கிடைத்துள்ளது. எனவே இறைவனின் வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக நிலைபெற்றுள்ள இந்த ஜமாஅத்தைக் குறித்து இது மிகவும் பலவீனமாகிக் கொண்டிருக்கிறது என்று கூறுபவர் யார்? இந்த ஜமாஅத் முன்னேறுவதற்கும், பரவுவதற்குமே நிலை பெற்றுள்ளது. எதிரிகளின் எந்தவொரு தாக்குதலும் அதனை ஒன்றும் அசைக்க முடியாது. மேலும் அல்லாஹ்வின் அருளால் இந்த ஜமாஅத் முன்னேறிக் கொண்டே செல்கின்றது.

பொருள் தியாகத்தின் நற்குறிப்பு நடைபெற்று வருகின்றது. அது தொடர்பாக நான் சில சம்பவங்களையும் எடுத்து வைக்கின்றேன். மக்கள் பொருள் தியாகம் செய்து எவ்வாறு தமது ஈமான் மற்றும் உறுதியை வெளிப்படுத்துகின்றார்கள்? மேலும் அல்லாஹ் அவர்களின் ஈமானிற்கு எவ்வாறு உறுதியை வழங்கியுள்ளான் என்பதும் அதிலிருந்து தெரிய வருகின்றது.

ஆப்ரிக்கா ஸிராலியோனில் ஒரு தொலை தூரப் பகுதியில் ஒரு நபர் இருக்கின்றார். அவரைக் குறித்து உள்ளூர் மிஷனரி சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்: நான் சுற்றுப் பயணத்தில் சென்றிருந்தபோது அது மாதத்தின் கடைசி நாட்களாக இருந்தன. அங்கு ஒரு ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கு வக்ஃபே ஜதீதின் பக்கம் கவனமூட்டினேன். மக்கள் பள்ளிவாசலில் இருந்தனர். அவர்களுக்கு இதன் பக்கம் கவனமூட்டினேன். அப்போது சந்தாவிற்காக ஒன்றுகூட்டி வைத்திருந்த தொகையை அங்குள்ள இமாம் ஷேக் உஸ்மான் சாஹிப் கொடுத்தார். மேலும் எங்களால் எங்களது வாக்குறுதியை முழுமை செய்ய முடியவில்லை. நாங்கள் எங்களது இலக்கு மற்றும் வாக்குறுதியை முழுமை செய்ய வேண்டும் என்பதே எங்களின் உளப்பூர்வமான ஆசையாக இருந்தது. ஆனால் தற்போது எங்களுக்கு வேறு எந்த வழியும், ஊடகமும் இல்லை என்று அவர் கூறினார். எவ்வாறிருப்பினும் துஆ செய்யுங்கள் என்று முஅல்லிம் சாஹிபிடம் அவர்கள் கூறினர்.

உள்ளூர் மிஷனரி சாஹிப் கூறுகின்றார்: நான் அப்போது அனைவரையும் ஒன்று கூட்டி துஆ செய்தேன். அனைவரும் உரத்த குரலில் ஆமீன் என்று கூறினர். பின்னர் மோட்டார் சைக்களில் அமர்ந்து எனது மிஷன் ஹவுஸிற்கு திரும்பி வந்து விட்டேன். தற்போது நான் மிஷன் ஹவுஸிற்கு தான் வந்தடைந்திருந்தேன். அதற்குள் நான் தங்களை சந்திப்பதற்காக மிஷன் ஹவுஸிற்கு வருகின்றேன் என்று அதே இமாமிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. நான் தற்போது தான் அங்கிருந்து வருகிறேன். அதற்குள் தொலைபேசி அழைப்பு வந்து விட்டதே என்று நான் ஆச்சரியம் அடைந்தேன். அந்த உள்ளூர் இமாம் என்னிடத்தில் நேரில் வந்தபோது கூறினார்: நான் செய்த துஆ இவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது சிறிது நேரத்திலேயே எனது உறவினர் ஒருவர் வந்தார். மேலும் சட்டைப் பையில் கையைப் போட்டு ஒரு லட்சம் லியோன் தொகையை எடுத்து எனது கையில் வைத்து விட்டார். மேலும் ஒரு

விவகாரத்திற்காக துஆ செய்யும்படி என்னிடமும் கூறினார். இதைக் கண்ட நான் அங்கேயே அல்லாஹு அக்பர் என்று உரத்த குரலில் முழக்கமிடத் தொடங்கினேன். இவருக்கு என்னவாகி விட்டது? என்று அந்த நபர் மிகவும் ஆச்சரியம் அடைந்தார். அப்போது நான் அவரிடத்தில் இதனை கூறினேன். எங்களது வக்ஃபே ஜதீத் சந்தாவில் ஒரு வாக்குறுதி இருந்தது. அதில் சிறிது தொகை பாக்கியாக இருந்து விட்டது. இப்போது தான் நாங்கள் துஆ செய்து விட்டு புறப்பட்டோம். அல்லாஹ் உம்மை அனுப்பி இந்தத் தொகையை எனக்கு வழங்கி விட்டான் என்று அவர் கூறினார்.

ஷேக் உஸ்மான் இமாம் அவர்கள் ஒரு லட்சம் லியோன் என்ற அந்த முழுத் தொகையையும் உடனடியாக வந்து வக்ஃபே ஜதீத் சந்தாவில் செலுத்தி விட்டார்கள். அந்தத் தொகை நம்மைப் பொறுத்தவரை மிக சிறிய தொகையாக இருந்தபோதிலும் அவருக்கு அது மாபெரும் தொகையாக இருந்தது. அதை நாம் கணக்கிட்டால் அது வெறும் ஆறரை பவுண்ட் தான் இருக்கும். ஆனால் அன்னாரின் இந்த தியாகம் மாபெரும் தியாகமாக இருந்தது. அது அல்லாஹ்வின் அருட்களை ஈர்க்கக் கூடியதாகும். அவருக்கும் தேவை இருந்தது. ஆனால் தமக்கு வந்த தொகையை உடனடியாக வந்து அவர் செலுத்தி விட்டார். இது அன்னாரின் தூய்மையாகும். ஒரு திர்ஹம் ஒரு லட்சம் திர்ஹமை விட முன்னிலை பெற்று விடுகின்றது என்பதற்கு இதுபோன்ற உதாரணங்கள் உள்ளன.

நிச்சயமாக அல்லாஹ் அவரின் மீது தனது அன்பிற்குரிய பார்வையை செலுத்தி இருப்பான். தியாகத்தின் இந்த தரம் ஓரிடத்தில் இல்லை. ஆண்களில் மட்டும் இல்லை. மாறாக, பெண்களிலும் காணக் கிடைக்கின்றது.

சாட் என்ற ஒரு நாடு உள்ளது. இங்கும் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் பெரும் நல்லடியார்கள் உருவாகி வருகின்றனர். சாட் ஜமாஅத்தின் பெரும்பான்மை புதிய அஹ்மதிகளைக் கொண்டதாகும். அங்குள்ள முபல்லிக் சாஹிப் கூறுகின்றார்: உம்மே ஹானி என்ற ஒரு மெண்மணி இருக்கின்றார். அன்னார் வக்ஃபே ஜதீதில் 17 ஆயிரம் பிரான்க் வாக்குறுதி செய்திருந்தார். ஏற்பாடு செய்ய முடியவில்லை. அன்னாரிடத்தில் ஓர் ஒட்டகம் இருந்தது. அந்த ஒட்டகத்தை 1,70,000 ற்கு விற்று வக்ஃபே ஜதீத் வாக்குறுதியை செலுத்தி விட்டார். மேலும் எஞ்சிய தொகையை தான் வைத்துக் கொள்ளவில்லை. பல்றே சந்தாக்களுக்கு கொடுத்து விட்டார்.

அடுத்து டோகோ என்ற ஒரு நாடு உள்ளது. அங்கு இப்ராஹீம் என்ற ஓர் அஹ்மதி உள்ளார். மக்களின் கால்நடைகளை அவர் மேய்த்து வருகின்றார். ஆடுகள் போன்றவற்றை அவர் மேய்க்கின்றார். வருகின்ற வருமானத்தை தனது கணக்கின்படி போட்டி போட்டுக் கொண்டு பொருள் தியாகம் செய்கின்றார். அங்கு அன்னார் வாக்குறுதி செய்தார்கள். பின்னர் வாக்குறுதியை முழுமை செய்ய முடியவில்லை. அருகிலேயே நதி உள்ளது. நதியிலிருந்து மணல் எடுத்துச் செல்லப்படுகின்றது. அன்னார் இவ்வாறு செய்தார்கள். அதாவது இரவில் கூலி வேலை செய்து இரண்டு டிரக்கை மணலால் நிறைத்தார்கள். அதிலிருந்து கிடைத்த வருமானத்தை வக்ஃபே ஜதீத் மற்றும் இதர சந்தாக்களில் கொடுத்து விட்டார்கள். ஏன் இவ்வளவு கடின உழைப்பு செய்தார்கள்? மேலும் இவ்வளவு கடின உழைப்பிற்கு பிறகு எந்தத் தொகையையும் தமக்காக ஏன் வைத்துக் கொள்ளவில்லை? ஏனென்றால் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்கான ஞானம் தற்போது அன்னாருக்கு கிடைத்திருந்தது.

அடுத்து ஆண், பெண் அல்லது வயது முதிர்ந்த மக்களுக்கான கேள்வி இல்லை. மாறாக இளைமையில் கால் வைக்கும் சிறுவர்களின் நிலையும் இவ்வாறாகவே உள்ளது.

பெலீஸ் சென்ட்ரல் என்ற அமெரிக்காவின் ஓர் இடம் உள்ளது. இங்கிருந்து ஆயிரக்கணக்கான மைல் தொலைவில் உள்ளது. அங்கு ஒருபோதும் காலத்தின் கலீஃபா செல்லவில்லை. அனைவரும் புதிய அஹ்மதியாக உள்ளனர். ஆனால் சிந்தனை ஒன்றாகும். ஆப்ரிக்காவின் சிந்தனையாக இருக்கட்டும். அல்லது அமெரிக்கா அல்லது தீவுவாசிகளின் சிந்தனையாக இருக்கட்டும். அல்லது ஆசியாவின் சிந்தனையாக இருக்கட்டும். அனைத்து சிந்தனைகளும் ஒன்றாக உள்ளன. இந்தப் புரட்சியைத் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள்.

சம்பவம் இவ்வாறாகும்: 14 வயதுடைய ஒரு சிறுவர் இருக்கின்றார். அவர் தஹ்ரீகே ஜதீத் சந்தாவை செலுத்தினார். அவரைப் பற்றிய குறிப்பை நான் இங்கு செய்திருந்தேன். அப்போது மக்கள் அவருக்கு நிறைய வாழ்த்துகளை தெரிவித்தனர். கனடாவிலிருந்து ஒருவர் அவருக்கு 200 டாலர் அன்பளிப்பையும் அனுப்பி இருந்தார். அதாவது நீ தியாகம் செய்துள்ளாய். எனவே இது என்புறமிருந்து உனக்கான அன்பளிப்பாகும் என்று அவர் கூறினார்.

தற்போது அந்த 14 வயதில் அடியெடுத்து வைக்கும் அந்த இளைஞரின் நிலையைப் பாருங்கள். இங்கு பொதுவாக விளையாட்டு பொருட்கள் வாங்குவதற்கான ஆர்வம் உருவாகும். ஆனால் அந்த சிறுவன் கூறினான். நான் எனது சமூக பாதுகாப்பிற்கான அட்டை எடுக்க இருந்தேன். அதற்கு எனக்கு 30 டாலருக்கான தேவை இருந்தது. எனவே நான் 30 டாலர்களை அதற்காக வைத்துக் கொண்டேன். எஞ்சிய 100 டாலர்களை நான் மீண்டும் சந்தாவாக கொடுத்து விடுகின்றேன் என்று கூறினார். அவர் ஏழை குடும்பத்தைச் சார்ந்தவர் ஆவார். இதனை நீயே வைத்துக் கொள். இதனை உனது குடும்பத்திற்காக வைத்துக் கொள் என்று அவரிடம் கூறப்பட்டபோதும் அவர் மிகப் பிடிவாதத்துடன் அந்தத் தொகை அனைத்தையும் சந்தாவில் கொடுத்து விட்டார். அந்தச் சிறுவரின் பெயர் தானியால் ஆகும். இதுவே உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குதல் ஆகும். இந்த சிந்தனை அந்தப் பிள்ளையிடம் எப்போதும் நிலைபெறுவதற்கு அல்லாஹ் அருள் செய்வானாக. மேலும் இந்த பௌதீக சூழல்களிலிருந்து அல்லாஹ் அந்த சிறுவனை பாதுகாத்து வைப்பானாக.

அடுத்து ஜமைக்கா என்ற ஒரு நாடு உள்ளது. நான் குறிப்பிடுகின்ற அந்த தொண்டரின் பெயர் யாஸீன் சாஹிப் ஆகும். அவர் நீண்ட காலமாக வேலையில்லாமல் இருந்தார். தெரு வீதிகளில் சின்னச் சின்ன பொருட்களை விற்று வந்தார். சாக்லேட் போன்றவற்றை விற்று வாழ்க்கையை கழித்து வந்தார். ஆனால் இந்த நிலையிலும் நான் பொருள் தியாகம் செய்ய வேண்டும் என்ற கவலை அவருக்கு ஏற்பட்டிருந்தது. நான் வக்ஃபே ஜதீதிற்கான வாக்குறுதி செய்துள்ளேன். ஆண்டு முடிவடைய உள்ளது. என்னிடத்தில் எதுவும் இல்லையே என்று அவர் எண்ணிக் கொண்டிருந்தார். கடைசியில் ஒரு நாள் மாலையில் அதாவது டிசம்பர் மாதத்தின் கடைசி நாளன்று மிஷனரி சாஹிபிடம் வந்தார். மேலும் 400 ஜமைகைன் டாலர் எனது வருமானமாகும். அதிலிருந்து 25 சதவிகிதத்தை எடுத்து தற்போது நான் தங்களுக்கு வக்ஃபே ஜதீத் சந்தாவாக 200 டாலரை கொடுக்கின்றேன் என்று அவர் கூறினார்.

அடுத்து ஒரு ஏழை நாட்டைச் சார்ந்த அஹ்மதி இருக்கின்றார். அவரின் தூய்மையையும், நன்றியுணர்வையும், அல்லாஹ்வின் திருப்தி மற்றும் அவனது நேசத்தை ஈர்க்கக் கூடிய அசாதாரண முன்னுதாரணத்தையும் பாருங்கள். இவர்கள் படிப்பறிவற்றவர்கள். ஏழைகள் என்று மக்கள் கூறுகின்றனர். ஆனால் கல்வியறிவு பெற்ற மக்களை விட இவர்கள் அதிகமாக மார்க்க அறிவை பெற்றவர்களாகவும், உள்ளத்தால் செல்வந்தர்களாகவும் இருக்கின்றனர்.

கினிகனாகிரி என்ற ஒரு நாடு உள்ளது. அங்குள்ள முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் கூறுகின்றார்: வக்ஃபே ஜதீத் சந்தாவின் பொருளாதார ஆண்டின் கடைசி வாரத்தில் வக்ஃபே ஜதீத் சந்தாவின் முக்கியத்துவம் மற்றும் அதன் அருட்கள் குறித்து நான் குத்பா கொடுத்தேன்.

அதில் நான் (ஹுஸூர்) கொடுத்த பல்வேறு குத்பாக்களிலிருந்து மேற்கோள்களை அவர் எடுத்து வைத்தார். மேலும் ஜமாஅத்திற்கு பொருள் தியாகம் பக்கம் அறிவுறுத்தி கவனமூட்டினார்.

அவர் கூறுகின்றார்: குத்பாவின் இறுதியில் ஓர் ஏழை அஹ்மதி ஆனால் தூய்மையான நபர் ஆவார். அவரின் பெயர் அஹ்மதி மூஸா சாஹிப் ஆகும். தனது சட்டைப் பையில் இருந்த சுமார் 2,18,500 பிரான்க் கனி தொகையை எடுத்து வக்ஃபே ஜதீத் சந்தாவாக கொடுத்து விட்டார். நீங்கள் பெரும் தொகையை கொடுத்துள்ளீர்களே? என்று நான் அவரிடம் கேட்டேன். கடந்த வருடமும் பெரும் தொகையை கொடுத்துள்ளீர்கள். இதற்கு என்ன காரணம்? என்று கேட்டேன்.

எனது உள்ளத்தில் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் இந்த கூற்று பசுமரத்து ஆணி போன்று பதிந்து விட்டது. அதாவது ஓர் உள்ளத்தில் இரண்டு நேசம் ஒன்றுகூட முடியாது. ஒன்று, மனிதன் இறைவன் மீது அன்பு கொள்ள வேண்டும். அல்லது செல்வத்தின் மீது அன்பு கொள்ள வேண்டும்.

இதன் காரணமாக எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்போது நான் எனது செயலால் அதனை வெளிப்படுத்துவதற்கு முயற்சி செய்கின்றேன். வீட்டின் அனைத்து செல்வத்தையும் அல்லாஹ்வின் வழியில் செலவிடுவதற்கு எனது ஈமான் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் ஈமானைப் போன்று இருக்க முடியாது. ஆயினும் சட்டைப் பையில் இருக்கின்ற அனைத்து செல்வத்தையும் அல்லாஹ்வின் வழியில் செலவிடுவதற்கு என்னால் முடியும். அல்லாஹ் எனக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப்

போன்ற ஈமானை வழங்குவதற்கு நான் துஆ செய்கின்றேன்.

மேலும் அவர்கள் கூறினார்கள்: இரண்டாவது பெரிய காரணம் என்னவென்றால், நான் பொருள் தியாகத்தில் பங்கு பெற தொடங்கியது முதல் அல்லாஹ் எனது ஈமானின் காரணமாக என்னை செல்வ செழிப்பாக்கி விட்டான். எனது ஈமானும் அதிகரித்து விட்டது. மேலும் என்னிடத்தில் ஓர் அசாதாரண மாற்றத்தை காண்கின்றேன்.

இது எப்படிப்பட்ட சிந்தனை என்றால் இந்த சிந்தனையும், புரிதலும் கல்வியறிவு பெற்ற ஏராளமான மக்களிடத்தில் இருப்பதில்லை.

அடுத்து ஈமானில் முன்னேறுவதற்கும் அல்லாஹ் எவ்வாறு ஏற்பாடு செய்கின்றான்? இது குறித்து ஒரு சம்பவம் உள்ளது.

கினிகனாகிரி என்ற ஒரு நாடு உள்ளது. அங்கு அல்ஹஸன் சாஹிப் என்ற கலப்படமற்ற தூய செல்வந்தர் ஒருவர் வியாபாரம் செய்கின்றார். அவர் கூறுகின்றார்: நான் சந்தாவின் தொகையை ஒரு கவரில் வைத்து எனது மேஜையில் வைத்து விட்டேன். பணிகளில் மும்முரமானதன் காரணமாக மிஷனிற்கு அனுப்ப முடியவில்லை. திடீரென நினைவுக்கு வந்தது. எனவே நான் அந்தத் தொகையை எனது ஓட்டுநரிடம் கொடுத்தேன். அந்த தொகையை சந்தாவில் கொடுத்து விட்டு வரும்படி அவரை மிஷன் ஹவுஸிற்கு அனுப்பி வைத்து விட்டேன். மேலும் நான் வேறொரு பணியின் காரணமாக வெளியில் சென்று விட்டேன். இதற்கிடையில் அன்னார் வெளியில் இருந்தபோது அன்னாரின் பக்கத்து கடைக்காரரின் அலுவலகத்தில் தீ பற்றி விட்டது. எரிந்து சாம்பலாகி விட்டது. மேலும் உங்களது அலுவலகத்தில் தீ பிடித்து விட்டது என்று எனக்கு தொலைபேசி வரத் தொடங்கியது. எனவே நான் உடனடியாக அங்கு சென்றடைந்தேன்.

தொடர்ந்து அவர் கூறுகின்றார்: இது எவ்வாறு சாத்தியமாகும்? நான் அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம் செய்துள்ளேனே! என்ற எண்ணம் எனது உள்ளத்தில் எழுந்தது. ஆனால் அல்லாஹ்வின் அடையாளத்தை பார்ப்போம். அவரது அலுவலகத்தின் சுவர் எனது அலுவலகத்தோடு இணைந்திருந்தபோதிலும் எனது அலுவலகம் முற்றிலும் பாதுகாப்பாக இருக்கும் அளவில் இறைவன் பாதுகாப்பு வழங்கினான். அந்த அலுவலகத்தில் அப்போது கம்பெனியின் பெரிய தொகையும் இருந்தது. இரண்டு அலுவலகத்தில் இன்னும் கூறப்போனால் அவருடைய அலுவலகத்தோடு இணைந்திருந்த இடம் எரிந்து விட்டது. ஆனால் இவருடைய அலுவலகம் பாதுகாப்பாக இருந்தது.

எனவே அவர் கூறுகின்றார்: இது நிச்சயமாக சந்தாவின் பரக்கத் ஆகும் என்ற எண்ணம் எனக்கு உடனடியாக தோன்றியது. அவர்களிடத்தில் ஞானம் உள்ளது. ஞானம் இல்லை என்பது தவறு.

அவர் கூறுகின்றார்: அத்துடன் எனது எண்ணம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த முன்னறிவிப்பின் பக்கம் சென்றது. அதாவது இந்த நெருப்பு உனது அடிமையாகும். மாறாக, இது உனது அடிமைகளின் அடிமையாகும்.

எவ்வாறிருப்பினும் அவர் கூறுகின்றார்: இவ்வாறு அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு சாதாரண அடிமையை பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பாக வைத்தான்.

அடுத்து ஒரு சம்பவம். கேம்பியா அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: நமது ஜமாஅத்தின் மண்டலத்தில் ஒரு ஜமாஅத் உள்ளது. அதிலிருந்து நமது ஜமாஅத்தின் முஅல்லிம் சாஹிப் உள்ளார். அவர் இந்த விஷயத்தை எடுத்துரைத்தார். அதாவது நமது ஜமாஅத்தைச் சார்ந்த Sambou Bah என்ற ஒரு நண்பர் கடந்த வருடம் வக்ஃபே ஜதீத் குறித்த எனது குத்பாவை கேட்டார். புதிய ஆண்டிற்கான அறிவிப்பு செய்யப்பட்டபோது நான் சம்பவங்களையும் எடுத்துரைத்திருந்தேன். அப்போது அவர் 500 டலாஸி கொடுத்து விட்டார். இந்த வருடம் அவரது விளைச்சல் இரண்டு மடங்காக ஆகி விட்டது. இவ்வாறு அல்லாஹ் அவர் மீது அருள் செய்தான். அவர் 500 டலாஸி வாக்குறுதி செய்திருந்தார். ஆனால் அவர் ஆயிரம் டலாஸி கொடுத்து விட்டார். அவருக்கு விவசாயத்தால் கிடைத்த வருமானத்திலிருந்து அவர் பங்கு பிரித்து 10 பண்டல்களை ஸக்காத்தாக கொடுத்து விட்டார். இந்த வருடம் அவருக்கு இந்த அளவிற்கு வருமானம் வந்தது. அதாவது இந்த வருடம் அவருக்கு எந்த அளவுக்கு வருமானம் இருந்தது என்றால் அவர் 50 பண்டல் ஸகாத் கொடுத்து விட்டார். அதேபோன்று நிலக்கடையிலிருந்தும் இரண்டு மூட்டையை ஸகாத்தாக கொடுத்தார்.

அவர் கூறுகின்றார்: தொடர்ந்து முறையாக சந்தா கொடுக்கக் கூடிய அஹ்மதிகளின் விளைச்சல் முன்பை விட அதிகமாக இருந்துள்ளது. எனவே அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஏதோ ஒரு விஷயம் உள்ளது. அதன் உறுப்பினர்கள் அல்லாஹ்வின் வழியில் செலவிடுகின்றார்கள். அவர்களின் விளைச்சலும் மிக அதிகரித்து விடுகின்றது என்று அஹ்மதி அல்லாதவர்கள் கூறி வருகின்றனர்.

அடுத்து ஆப்ரிக்கா அல்லது சில ஏழை நாடுகளின் அஹ்மதிகள் மற்றும் புதிய அஹ்மதிகளுடைய விவகாரங்கள் மட்டுமல்ல. மாறாக, பணக்கார நாடுகளிலும் உள்ளூர் மக்கள் உள்ளனர். அதாவது ஈமானை பெற்றவர்களும் இருக்கின்றனர். அவர்களின் தியாகங்களுக்கும் முன்னுதாரணங்கள் உள்ளன.

ஜெர்மனியின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: ரயிடர் ஜஹான் என்ற ஒரு ஜமாஅத்தில் உங்களது சந்தாக்களை செலுத்துங்கள் என்றும், குறைவை நீக்குங்கள் என்றும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அப்போது அந்த ஜமாஅத்தின் தலைவரின் மனைவி ஜெர்மனிய அஹ்மதி ஆவார். மிகவும் தூயவர். அவர் கூறினார்: இந்த ஜமாஅத்தின் சந்தாவும் அதிகரிக்க வேண்டும். மேலும் இந்த ஜமாஅத்தும் சந்தா கொடுக்கக் கூடிய பட்டியலில் இடம் பெற்று விட வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம்.

அந்த ஜெர்மன் அஹ்மதி பெண்மணி புதிய அஹ்மதியாக இருக்கவில்லை. அவர் அஹ்மதி ஆகி நீண்ட காலம் ஆகி இருந்தது. அவர் 19,000 யூரோ சந்தா கொடுத்து விட்டார். மேலும் இதனை நான் எனக்கு கார் வாங்குவதற்காக வைத்திருந்தேன். ஆனால் எங்களது ஜமாஅத்தின் பெயர் காலத்தின் கலீஃபாவிற்கு முன்னால் வந்து விட வேண்டும் என்ற ஆசை எனது உள்ளத்தில் இருந்தது. எனவே இதனை நான் கொடுக்கின்றேன். மேலும் அல்லாஹ்வின் திருப்தியை பெறக் கூடியவராக நான் ஆகி விட வேண்டும் என்றும் நான் விரும்புகின்றேன் என அவர் கூறினார்.

அடுத்து ஜெர்மனியைச் சார்ந்த ஒரு மாணவர் இருக்கின்றார். அவர் வாக்குறுதியாக 500 யூரோ எழுதியிருந்தார். நீ இந்த 500 யூரோவை எவ்வாறு செலுத்துவாய்? என்று அவரது பெற்றோர்கள் கேட்டனர். எப்படியாவது நான் கொடுத்து விடுவேன் என்று அவர் கூறினார்.

அவர் கூறுகின்றார்: அல்லாஹ்வின் புறமிருந்து உடனடியாக இதற்கு பதில் கிடைத்தது. ஒரு வாரத்திற்குள்ளேயே எனக்கு பல்கலைக்கழகத்திலிருந்து இவ்வாறு தொலைபேசி அழைப்பு வந்தது. நாங்கள் 40 மாணவர்களை தேர்ந்தெடுத்துள்ளோம். அவர்களுக்கு பல்கலைக்கழகம் சார்பாக உதவித்தொகை வழங்கப்படும். உங்களுக்குரிய உதவித் தொகையை அனுப்பி வைப்பதற்கு நீங்கள் உங்களது வங்கிக் கணக்கு எண்களை அனுப்பி வையுங்கள் என்று கூறப்பட்டது. 1000 யூரோ அனுப்புகின்றோம் என்றும் கூறப்பட்டது. அவர் கூறுகின்றார்: அல்லாஹ் எனக்கு அதனை இரண்டு மடங்காக ஆக்கி கொடுத்து விட்டான்.

அடுத்து யூகேவின் உதாரணமும் உள்ளது. பால்ஹம் என்ற ஜமாஅத்தின் தலைவர் இவ்வாறு கூறுகின்றார்: வக்ஃபே ஜதீதின் இலக்கில் சிறிது குறை இருந்தது. கூடுதலாக செலுத்தியிருந்தபோதிலும் சிறிது குறைவு இருந்தது. அவர் தொடர்ந்து கூறுகின்றார்: அடுத்த நாள் உள்ளூர் கவுன்ஸிலிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் சேவை வரியாக ஒரு பெரும் தொகை செலுத்தும்படி கூறப்பட்டிருந்தது. நான் தற்போது இது குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கும்போதே வக்ஃபே ஜதீத் அலுவலகத்திலிருந்து எனக்கு தூதுச் செய்தி வந்தது. எனவே நான் முதலில் வக்ஃபே ஜதீத் சந்தாவை செலுத்தி விட்டேன். அடுத்த நாளே உள்ளூர் கவுன்ஸிளிலிருந்து வருத்தம் தெரிவித்து மற்றொரு கடிதம் வந்தது. மேலும் நாங்கள் என்ன தொகையை கேட்டு கடிதம் அனுப்பினோமோ அதனை தவறுதலாக அனுப்பி விட்டோம். கணக்கீடு செய்து பார்த்தபோது நீங்கள் எங்களுக்கு எதுவும் கொடுக்க வேண்டியதில்லை. மாறாக நாங்கள் தான் உங்களுக்கு ஒரு தொகை கொடுக்க வேண்டியதுள்ளது என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

அவர் கூறுகின்றார்: நான் வக்ஃபே ஜதீத் சந்தாவாக கொடுத்த தொகையிலிருந்து அது 10 மடங்கு அதிகமானதாக இருந்தது. இதேபோன்று அல்லாஹ் ஈமானை உறுதிப்படுத்துவதற்காக சில முறை அவருக்கு திருப்பி கொடுத்து விடுகின்றான்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

அடுத்து, உடனடியாக அல்லாஹ் கொடுத்து விடுவதற்கான மற்றோர் உதாரணம் இந்தியாவின் உதாரணம் ஆகும். இன்ஸ்பெக்டர் சாஹிப் கூறுகின்றார்கள்: நான் வக்ஃபே ஜதீத் சந்தா நிதியாண்டு முடிவின்போது யாத்கீர் ஜமாஅத்தில் மக்களுக்கு கவனமூட்டுவதற்காக சென்றிருந்தேன். அப்போது அங்கிருந்த ஓர் இளைஞரிடம் அவர் சென்றார். மேலும் வக்ஃபே ஜதீத் சந்தா செலுத்தும்படி அவரிடம் பேசினார். அப்போது தற்போது எனது சட்டைப் பையில் 1500 ரூபாய் மட்டுமே உள்ளது. அதை ஒருவருக்கு கொடுப்பதற்காக வைத்துள்ளேன். கண்டிப்பாக அதை கொடுக்க வேண்டும் என்று அவர் கூறினார். ஆயினும் தாங்கள் வக்ஃபே ஜதீத் சந்தா கேட்டு விட்டீர்கள். எனவே நான் என்ன செய்வது என்று தற்போது யோசித்துக் கொண்டிருக்கின்றேன். நான் தங்களுக்கு சந்தா கொடுத்து விட்டால் அந்த நபருக்கு எப்படி செலுத்துவேன்? அவர் உடனடியாக பணம் கேட்டு விட்டால் மேற்கொண்டு தொகைக்கான ஏற்பாடு செய்ய முடியாது. எவ்வாறிருப்பினும் பரவாயில்லை. நான் சந்தா கொடுத்து விடுகின்றேன் என்று அவர் கூறினார். மேலும் 1500 ரூபாய் சந்தா கொடுத்து விட்டு திரும்பிச் சென்று விட்டார்.

இரண்டாவது நாள் வக்ஃபே ஜதீத் செயலருடன் அவரை சந்திப்பதற்காக அவரது கடைக்கு நான் சென்றேன். அப்போது அவர் பையிலிருந்த பணத்தை எடுத்து வெளியில் வைத்தார். அப்போது குவியல் போன்ற நிலையில் அந்தப் பணம் இருந்தது. அவர் கூறினார்: நேற்று நான் சந்தா கொடுத்து விட்டு வீட்டிற்கு சென்றபோது ஏற்கனவே தடைபட்டிருந்த இடங்களிலிருந்து எனக்கு பணம் வந்து விட்டது. மக்கள் எனக்கு பணம் தர வேண்டியதிருந்தது. இன்று பல ஆயிரம் ரூபாய் என்னிடத்தில் உள்ளது என்று அவர் கூறினார். எனவே இவ்வாறு அல்லாஹ் அருள் செய்கின்றான்.

அடுத்து செல்வந்தர்கள் உள்ளனர். ஒரு வகையில் உலகின் பார்வையில் அவர்கள் பெரும் செல்வந்தர்கள் இல்லை என்றாலும் ஜமாஅத்தின் பார்வையில் அவர்கள் செல்வந்தர்கள் ஆவர். கருளாயி ஜமாஅத்தில் ஒருவர் இருக்கின்றார். அவர் 10 லட்சம் ரூபாய் சந்தா கொடுத்தார். அன்னாரது மனைவி கிறிஸ்துவத்திலிருந்து அஹ்மதிய்யத்திற்கு வந்துள்ளார். துஆக்களிலும், தொழுகைகளிலும் மிகவும் ஆர்வம் கொண்டவர். மிகவும் தூய பெண்மணி ஆவார். வஸிய்யத் செய்தவராகவும் இருக்கின்றார். கணவன், மனைவி இருவரும் வஸிய்யத் செய்துள்ளனர். நாங்கள் அன்னாரது வீட்டிற்கு சென்றோம். அப்போது அன்னாரது மனைவி 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை அவர்களுக்கு கொடுத்து விட்டார். இன்ஸ்பெக்டர் கூறினார்: ஏற்கனவே உங்களது கணவர் 10 லட்சம் கொடுத்து விட்டார். தற்போது நீங்களும் மீண்டும் கொடுக்கின்றீர்கள். அப்போது அந்தப் பெண்மணி இவ்வாறு பதிலளித்தார்: அதாவது சந்தாவின் பரக்கத்தின் மூலமாகவே எங்களுக்கு இந்த அருட்கொடைகள் கிடைத்துள்ளன. எனவே மீண்டும் மீண்டும் சந்தா கொடுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று எனது உள்ளம் விரும்புகின்றது. இந்த அருளின் காரணமாகவே எங்களது வியாபாரத்திலும் முன்னேற்றம் கிடைத்து விடுகின்றது. எனவே நாங்கள் சந்தாக்கள் கொடுப்பதிலிருந்து ஒருபோதும் பின்வாங்க மாட்டோம்.

அடுத்து மாலி நாட்டின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: காயி என்ற நகரத்தில் ஜமாஅத் ரேடியோவில் பொருள் தியாகம் மற்றும் வக்ஃபே ஜதீத் சந்தாவின் முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்கள் என்ற தலைப்பில் நாங்கள் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பினோம். அதற்குப் பிறகு அவர் கூறுகின்றார்: ஜமாஅத்துகளில் நான் சுற்றுப்பயணம் செய்தேன். அப்போது இறை அருளால் அனைத்து ஜமாஅத்துகளும் பொருள் தியாகத்தில் ஏதாவதொரு வகையில் பங்கு பெற்றார்கள்.

ஒரு புதிய அஹ்மதி இவ்வாறு கூறினார்: நான் சந்தாவின் திட்டம் தொடர்பாக கேட்டபோது என்னிடத்தில் ரொக்கமாக அல்லாஹ்வின் வழியில் கொடுப்பதற்கு பணம் இல்லாமல் இருந்தது. நிச்சயம் என் சார்பாக ஜமாஅத்திற்கு நானும் ஏதாவது கொடுப்பேன் என்று நான் முடிவெடுத்தேன். மற்றவர்களிலிருந்து நான் விலகியிருக்க மாட்டேன்.

அவர் கூறுகின்றார்: நான் காட்டிற்கு சென்றேன். மேலும் காய்ந்த பழைய விறகுகளை ஒன்றுகூட்டினேன். பின்னர் அங்கேயே அந்த விறகுகளிலிருந்து கரியை நான் தயார் செய்தேன். பின்னர் நான் ஊருக்கு திரும்பினேன். ஜமாஅத்தின் குழு சுற்றுப்பயணத்திற்கு அங்கு சென்றிருந்தது. அப்போது அன்னார் கரியின் 20 மூட்டைகளை சந்தாவாக கொடுத்து விட்டார். ஓர் ஏழை நபரால் என்ன முடியுமோ அதனை அவர் செய்து விட்டார். எவ்வாறிருப்பினும் அவர்களைப் பொறுத்தவரை அது 50000 பிரான்க் தொகையாக இருந்தது. நானும் பொருள் தியாகத்தில் பங்கு பெற்று விட்டேன் என்று எனக்கு தற்போது மகிழ்ச்சியாக உள்ளது என்று அவர் கூறுகின்றார்.

போலந்து நாட்டிலிருந்து ஒரு சகோதரர் எழுதுகின்றார்: வருடத்தின் இறுதியில் முரப்பி சாஹிப் வக்ஃபே ஜதீத் சந்தா கொடுக்கும்படி கூறினார். அப்போது என்னிடம் சுமார் 100 ஸ்லோடி தொகை இருந்தது. இது போலந்து நாட்டின் கரன்ஸி ஆகும். அங்கு 26ஆம் தேதி காதியான் ஜல்ஸாவும் இருந்தது. எனது சொற்பொழிவையும் அன்னார் கேட்க வேண்டியதிருந்தது. மொபைல் பேக்கேஜ் முடிவடைய இருந்தது. எனவே ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவை நான் எவ்வாறு கேட்பேன்? என்ற எண்ணம் அவருக்கு எழுந்தது.

அவர் கூறுகின்றார்: அந்த சொற்பொழிவை நிச்சயம் நான் கேட்க வேண்டுமென்று எனது உள்ளம் விரும்பியது. எவ்வாறிருப்பினும் நான் 20 ஸலோடி தொகையில் பாக்கேஜ் வாங்கி விட்டேன். மீதம் 18 ஸலோடி என்ற கணக்கில் எனக்கும், எனது மகளுக்கும், மனைவிக்கும் சந்தா கொடுத்து விட்டேன். மேலும் மீதியை பிறகு கொடுக்கலாம். இனி எதுவும் வாங்கக் கூடாது என்று நான் முடிவெடுத்தேன். வீட்டிலுள்ள பொருட்களைக் கொண்டே கழித்து விடலாம் என்றும் தீர்மானித்தேன். மேலும் தொகை இருந்தால் அதையும் கொடுத்து விடலாமே என்று எனது உள்ளம் விரும்பியது. நாங்கள் துஆ செய்தோம். எனவே அல்லாஹ் தனது அருளை செய்தான்.

அவர் கூறுகின்றார்: டிசம்சம் 28 ஆம் தேதி பணியிலிருந்து நான் திரும்பி வந்து கொண்டிருந்தேன். எனக்கு 12 ஸலோடி தொகையை எனது நண்பர் எனக்கு கொடுக்க இருந்தார். அவர் என்னை சந்தித்தார். எனக்கு மறந்து விட்டது. தற்போது இதனை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று அவர் கூறினார். வீட்டிற்கு வந்து நான் கணக்கை பார்த்தேன். பல்வேறு வழிமுறைகளில் பணம் வந்திருந்தது. எவ்வாறு 1200 ஸலோடி எனது கணக்கிற்கு வந்தது என்பது எனக்குத் தெரியவில்லை.

அவர் கூறுகின்றார்: நான் 3 ஆண்டுகளாக ஒரு தொழிற்சாலையில் பணி செய்து வந்தேன். அவர்கள் ஒருபோதும் கூடுதல் தொகையை கொடுத்ததில்லை. எனவே வக்ஃபே ஜதீத் சந்தா செலுத்தியதன் காரணமாக எனது கணக்கில் இந்தத் தொகை வந்துள்ளது. எனக்கு 1300 ஸலோடி கிடைத்து விட்டது. பின்னர் நான் 300 ஸலோடி தொகையை சந்தாவாக கொடுத்து விட்டேன். மற்றோர் அருள் இவ்வாறு நிகழ்ந்தது. அதாவது எனது மகன் எங்கு பணி செய்து வருகின்றானோ அங்கு ஆண்டில் ஒரு முறை அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் அதிகரிக்கப்படும். இந்த வருடம் அக்டோபரில் ஒரு முறை அவரது வருமானம் கூட்டப்பட்டிருந்தது. ஆனால் டிசம்பர் 31 ஆம் தேதி மீண்டும் அவரது வருமானத்தில் மேலும் கூடுதலாக வழங்கப்பட்டது. எனவே இந்த விஷயம் எங்களது ஈமானையும் அதிகரித்து விட்டது என்று அவர் கூறுகின்றார்.

தன்ஸானிய்யா மண்டலத்தில் ஷியான்கா என்ற ஒரு ஜமாஅத் உள்ளது. அங்குள்ள புதிய அஹ்மதிகள் மெது மெதுவாக ஜமாஅத் அமைப்பில் இணைந்து வருகின்றனர். அங்குள்ள மவ்லவி சாஹிப் எழுதுகின்றார்கள்: கடந்த வருடம் ரம்ஜான் சாஹிப் என்ற ஒரு நண்பர் பைஅத் செய்திருந்தார். அவர் தகுதிக்கேற்ப தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் சந்தாவிற்கான வாக்குறுதியை வழங்கினார். வருடம் முடிவதற்கு முன்பாகவே தனது வாக்குறுதியை இரண்டு மடங்கு தொகையை செலுத்தி விட்டார்.

இதேபோன்று மற்றொரு சந்தர்ப்பத்தில் அன்னார் தனது குடும்பத்தின் சார்பாக ஒரு பிளாட்டையும் ஜமாஅத்தின் பெயரில் கொடுத்து விட்டார். அவர் வசித்து வந்த ஊரில் ஏனைய மக்களுக்கு இது மிகவும் விசித்திரமான விஷயமாக இருந்தது. இந்த நபர் இவ்வாறு அவசரப்பட்டு தனது செல்வத்தை மார்க்கத்தின் வழியில் கொடுத்து முடித்து விடுவார் என்று சிலர் அவரிடம் எள்ளிநகையாடினர். உண்மையில் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்த பிறகு தான் அவருக்கு பொருள் தியாகத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் ஞானம் பற்றி தெரிய வந்தது என்று முஅல்லிம் சாஹிப் கூறினார்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

அவர் கூறுகின்றார்: அல்லாஹ்வின் வழியில் அவர் பொருள் தியாகம் செய்யத் தொடங்கியபோது அவரது பணியில் நிறைய அருள் உண்டானது. மக்கள் என்ன வேண்டுமானாலும் கூறிக் கொள்ளட்டும். ஆனால் உண்மையில் இந்த வருடத்தில் அவருக்கு பல்வேறு இடங்களில் மேலும் இரண்டு பிளாட்டுகளை வாங்குவதற்கும், இரண்டு வீடுகளை கட்டுவதற்கும் நற்பேறு கிடைத்தது. இவை அனைத்தும் அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்தது மற்றும் ஒரு பிளாட்டை ஜமாஅத்தின் பெயரில் கொடுத்ததன் அருளால் நிகழ்ந்ததாகும்.

அடுத்து சிராலியோனின் ஒரு சம்பவம் ஆகும். ஈமான் மற்றும் தூய்மையில் புதிய அஹ்மதிகள் எவ்வாறு முன்னேற்றம் அடைகின்றனர்? இது தொடர்பாக ஒரு சம்பவம் வருகின்றது. போர்ட் லோகோ மண்டலத்தின் மிஷனரி ஜிப்ரீல் சாஹிப் கூறுகின்றார்கள்: ஒரு புதிய அஹ்மதிகளின் ஜமாஅத்தில் வக்ஃபே ஜதீத் சந்தா தொடர்பாக அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. புதிதாக ஒரு ஜமாஅத் உருவாகி உள்ளது. அது புதிய அஹ்மதிகளின் ஜமாஅத் ஆகும். இதற்கிடையில் கண் பார்வையற்ற ஒரு முதிய பெண்மணி ஒரு பிள்ளையின் உதவியுடன் என்னிடத்தில் வந்தார். நான் எந்த வாக்குறுதியும் எழுதிக் கொடுக்கவில்லை. ஆனால் 2000 லியோனை வக்ஃபே ஜதீதில் கொடுப்பதற்காக வந்துள்ளேன்.

உள்ளூர் மிஷனரி சாஹிப் கூறுகின்றார்: நீங்கள் ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டீர்கள். நானே உங்களிடத்தல் வந்திருப்பேனே என்று நான் கூறினேன். அதற்கு அந்த வயதான பெண்மணி கொடுத்த பதிலை கேளுங்கள். ஏழை பெண்மணி ஆவார். வெளிப்படையில் படிக்காத பெண்மணி ஆவார். அவர் கூறுகின்றார்: ஒன்று, நான் மிக குறைந்த தொகையை கொடுக்க வந்துள்ளேன். அதுவும் நான் தங்களை எனது வீட்டிற்கு அழைத்து கொடுப்பதா? நான் முழு நற்கூலியையும் பெற விரும்புகின்றேன். எனவே நானே நேரில் வந்து கொடுத்து விட்டேன் என்று கூறினார்.

ஐவெரிகோஸ்ட் மண்டலத்தின் ஸான்பேதுரு ஜமாஅத்தின் முபல்லிக் கூறுகின்றார்: கோலி பாலி என்ற ஜமாஅத்தில் ஓர் உறுப்பினர் உள்ளார். அவர் ரமலானில் என்னை தொலைபேசியில் அழைத்தார். வக்ஃபே ஜதீத் சந்தா பற்றி கேட்டார். ரமலானில் சந்தா கொடுப்பது அல்லது அதில் கூடுதல் செய்வது அவசியமா? என்றும் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அழகிய நடைமுறை என்னவாக இருந்ததென்றால், அவர்கள் இந்த மாதத்தில் மிக அதிகமாக அல்லாஹ்வின் வழியில் செலவு செய்து வந்துள்ளார்கள் என்று நான் கூறினேன். மேலும் அதன் முக்கியத்துவம் பற்றியும் கூறினேன். மேலும் இஸ்லாத்தை பரப்புகின்ற பணிகளில் இது எவ்வாறு செலவிடப்படுகின்றது என்று வக்ஃபே ஜதீத் மற்றும் தஹ்ரீகே ஜதீத் சந்தா குறித்தும் அவருக்கு கூறினேன். கட்டாயம் ஒன்றும் கிடையாது. ஆனால் தமது தகுதிக்கேற்ப அதிக அதிகமாக ரமலான் மாதத்தில் பொருளாதார திட்டங்களில் பங்கெடுக்க வேண்டும் என்றும் கூறினேன்.

எவ்வாறிருப்பினும் அன்னார் ஏற்கனவே ஒவ்வொரு மாதமும் கொடுத்து வந்த 20 ஆயிரம் பிரான்க் தொகையை கொடுத்து வந்தார். மேலும் இனி ரமலானில் மட்டுமல்ல. மாறாக, ஒவ்வொரு மாதமும் முறையாக தனது பழைய கட்டாயச் சந்தாக்களுடன் 30 ஆயிரம் பிரான்க் தொகையை கூடுதலாக கொடுப்பேன் என்று அவர் வாக்குறுதி செய்தார். கூடுதல் தொகையை குறிப்பாக வக்ஃபே ஜதீத் மற்றும் தஹ்ரீகே ஜதீதில் கொடுத்து வருவேன். இன்ஷா அல்லாஹ் ஆண்டின் முடிவிற்குள் அந்த கூடுதல் தொகையை வக்ஃபே ஜதீத் சந்தாவில் அதிகரிப்பதற்கும் முயற்சி செய்வேன் என்றும் அவர் வாக்குறுதி செய்தார். அல்லாஹ்வின் அருளால் அன்னார் ரமலானுக்குப் பிறகு ஒவ்வொரு மாதத்தின் ஆரம்பத்திலும் சுயமே கவலையுடன் கட்டாயச் சந்தாக்களை இப்போது வரை செலுத்தி வருகின்றார்.

இங்கு இஸ்லாத்தை பரப்புகின்ற விஷயம் உள்ளது. செலவீனங்கள் பற்றி பேசப்பட்டுள்ளது. எனவே இங்கு நான் ஒன்றை கூறி விடுகின்றேன். அதாவது கடந்த ஆண்டு அல்லாஹ் ஜமாஅத்திற்கு 187 பள்ளிவாசல்கள் கட்டுவதற்கு நற்பேறு வழங்கியுள்ளான். அதுமட்டுமின்றி ஆப்ரிக்காவில் தற்போது 105 பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதேபோன்று 144 மிஷன் ஹவுஸ்கள் கட்டப்பட்டுள்ளன. இதில் பெரும்பாலும் ஆப்ரிக்காவில் கட்டப்படுள்ளது. மேலும் 45 மிஷன் ஹவுஸ்களும் கட்டப்பட்டு வருகின்றன. இதுமட்டுமின்றி எங்கு உடனடியாக மிஷன் ஹவுஸ் கட்ட முடியாதோ அங்கு கட்டிடங்கள் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளன. ஆப்ரிக்க நாடுகளில் 731 மிஷன் ஹவுஸ்களும், முரப்பிமார்களின் குடியிருப்புகளும் வாடகைக்கு பெறப்பட்டுள்ளன. ஏனைய ஆசிய நாடுகளிலும் 632 மிஷன் ஹவுஸ்கள் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் நான் இதனையும் கூறி விடுகின்றேன். பொதுவாக வக்ஃபே ஜதீத் சந்தாக்களின் பெரும்பாலான தொகை ஆப்ரிக்க நாடுகளிலேயே செலவிடப்படுகின்றன. பள்ளிவாசல் கட்டுமானம் போன்ற விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. இந்த விஷயம் கூட எளிமையாக நடந்து விடுவதில்லை. எல்லா இடங்களிலும் எதிரிகளின் எதிர்ப்பையும் சந்திக்க நேரிடுகின்றது. ஆனால் அல்லாஹ்விற்காக இந்த அனைத்து பணிகளையும் ஜமாஅத் செய்து வருகின்றது. மேலும் அல்லாஹ் ஜமாஅத்திடம் முன்னேற்றத்திற்கான வாக்குறுதியையும் செய்துள்ளான். எனவே அல்லாஹ்வின் சிறப்பான உதவியும் கிடைத்து வருகின்றது.

கோகா கன்ஷாஸா பகுதியின் ஒரு சம்பவத்தை கூறுகின்றேன். அங்குள்ள முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்: இங்கு பாந்துந்தோ மண்டலத்தின் ஓரிடத்தில் ஜமாஅத் நிலைபெற்று இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. பள்ளிவாசல் கட்டுமானப் பணி நடைபெற்று வருகின்றது. அங்கு சுன்னத் ஜமாஅத்தைச் சார்ந்த முஸ்லிம்கள் அஹ்மதிகளுக்கு துன்பம் கொடுப்பதிலும், அரசாங்க அலுவலகங்களில் நமக்கு எதிராக புகார் செய்வதிலும் எந்தக் குறைவும் வைக்கவில்லை. எந்தவொரு வழிமுறையும் வெற்றி பெறாதபோது அவர்கள் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். எவ்வாறிருப்பினும் எதிரிகளுக்கு எந்த வகையிலும் வெற்றி கிடைப்பதில்லை. ஆயினும் மற்றொரு பக்கம் பள்ளிவாசல் கட்டுமானப் பணியும் நடந்து வருகின்றது. அங்கு பள்ளிவாசல் கட்டுமானப் பணியை மேற்பார்வை செய்து வருகின்ற ஓர் அஹ்மதி இருக்கின்றார். அவர் இவ்வாறு கூறியுள்ளார்: பள்ளிவாசல் கட்டுமானத்தின்போது ஒரு நாள் இங்குள்ள பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான ஒருவர் எங்களிடத்தில் வந்தார். அவர் கிறிஸ்துவர் ஆவார். பள்ளிவாசல் கட்டுமானப் பணிகளில் உதவி செய்யத் தொடங்கி விட்டார். எந்த அளவுக்கென்றால் தொலை தூரத்திலிருந்து அஹ்மதிகள் மணல் எடுத்து வந்தனர். அவர்களுடன் இணைந்து தள்ளு வண்டி அல்லது ரேடியை இழுத்து வந்தார். ஒரு பக்கம் எதிரிகள் தமது பணியை செய்து கொண்டிருக்கின்றனர். மற்றொரு பக்கம் அந்நியர்கள் மூலமாக இறைவன் பணியை நடத்துகின்றான். நல்லியல்பு கொண்ட மக்கள் இவ்வாறும் வந்து விடுகின்றனர்.

அடுத்து கேமரூன் நாட்டின் ஒரு சம்பவம் உள்ளது. அங்கு Biodes Senge என்ற ஊரில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ளனர். இது அங்குள்ள ஒரு நகரமாகும். Douala என்பது அந்த நகரத்தின் ஒரு வீதியாகும். அங்கு 2 ஆண்டுக்கு முன்பு ஜமாஅத் நிலைபெற்றுள்ளது. பள்ளிவாசல் கட்டுமானப் பணிகள் தொடங்கின. அப்போது அந்தப் பகுதியின் உள்ளூர் நிர்வாகத்திடமிருந்து பள்ளிவாசல் கட்டுமானப் பணியை நிறுத்தும்படி கடிதம் வந்தது. ஜமாஅத், பணியை நிறுத்தி விட்டது. கவர்னருக்கும், சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் இந்த ஜமாஅத் ஒரு தீவிரவாத ஜமாஅத் ஆகும். இவர்களுக்கு இஸ்லாத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை. எனவே பள்ளிவாசல் கட்ட முடியாது என்று முஸ்லிம் அமைப்புகள் கடிதங்கள் அனுப்பி இருந்தது தெரிய வந்தது.

இது இஸ்லாமிய நாடுகளில் செய்யப்படும் பிரச்சாரம் ஆகும். அவர்களின் மவ்லவிமார்கள் அங்கு செல்கின்றார்கள். அவர்கள் இந்தப் பணியை செய்கின்றனர்.

எவ்வாறிருப்பினும் அவர்கள் இந்த கடிதத்தை எழுதினர். மேலும் சுயமே துஆக்களில் மும்முரமாகி விட்டனர். மேலும் பலரை தொடர்பு கொண்டார்கள். அவர்கள் கூறுகின்றனர்: ஒரு மாதத்திற்குப் பிறகு உள்ளூர் நிர்வாகம் எங்களை தமது அலுவலகத்திற்கு அழைத்தது. பல்வேறு அமைப்புகளின் தலைவர்களும் முஸ்லிம்களின் Chief இமாம் மற்றும் ஏனைய மக்களையும் அழைத்தது. உள்ளூர் நிர்வாகம் ஓர் அறிக்கையை வாசிக்கத் தொடங்கியது. மேலும் முஸ்லிம்களின் புகாரினால் எந்தப் பணி நிறுத்தப்பட்டதோ அது தொடர்பாக கூறப்பட்டது. நாங்கள் பணியை நிறுத்தும்படி செய்து விட்டோம். ஆனால் கேமரூன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து அறிக்கைகள் கிடைத்துள்ளன. அஹ்மதிய்யா ஜமாஅத்

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

உலகளாவிய ஜமாஅத் ஆகும். அது 200 ற்கும் மேற்பட்ட நாடுகளில் பணி செய்து வருகின்றது. 15 ஆண்டுகளாக கேமரூனிலும் பணி செய்து வருகின்றது. கேமரூனிலும் பல இடங்களில் பள்ளிவாசல் கட்டியுள்ளது. எவ்வாறிருப்பினும் இவ்வாறு இவர்கள் மார்க்கத் தொண்டாற்றி வருகின்றார்கள் என்று கூறப்பட்டது. அதுமட்டுமின்றி ஜமாஅத் செய்து வரும் ஏனைய படைப்பின சேவை பற்றியும் கூறப்பட்டது. ஏராளமான பகுதிகளில் சுத்தமான குடிநீர் குழாய்களும் நிறுவப்பட்டுள்ளன. அவர்கள் குழாய்களையும் அமைத்து கொடுத்துள்ளார்கள். இந்த மக்கள் அனாதைகளை பராமரித்து வருகின்றார்கள். மாணவர்களின் அறிவார்ந்த மைதானத்தில் பணி செய்து வருகின்றார்கள்.

அதேபோன்று தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராக எப்போதும் பேசி வருகின்றனர். ஜமாஅத் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான போதனை வழங்குகின்றது. வாள் ஏந்திய ஜிஹாத் கூடாது. மாறாக, பேனா ஏந்திய ஜிஹாத் உள்ளது என்று ஜமாஅத் கூறுகின்றது. இந்த எல்லா விஷயங்களையும் உள்ளூர் நிர்வாகம் அவர்களுக்கு கூறியது. மேலும் முஸ்லிம்களில் பெரியவர்களான அரசர்களும், ஏழைகளும் இவர்களின் ஜல்ஸாவில் கலந்து கொள்கின்றனர். எனவே அவர்களை பள்ளிவாசல் கட்டுவதிலிருந்து தடுப்பதற்கு எந்த காரணமும் இல்லை. இன்னும் பள்ளிவாசல்கள் இவர்களால் கட்ட முடியும் என்று கூறப்பட்டது.

முபல்லிக் சாஹிப் கூறுகின்றார்: உள்ளூர் நிர்வாகம் அந்த அறிக்கையை வாசித்து முடித்த பிறகு அங்குள்ள உள்ளூர் பகுதியின் சார்பாக வந்திருந்த அனைத்து முஸ்லிம் தலைவர்களும் எழுந்து நின்று விட்டனர். மேலும் இவர்கள் காஃபிர்கள். நாங்கள் இவர்களை காஃபிர்களாக பார்க்கின்றோம். நீங்கள் எங்களிடம் கேட்காமலேயே இந்த அறிக்கையை தயாரித்துள்ளீர்கள். நாங்கள் அதனை ஏற்கவில்லை என்று கூறினர்.

எவ்வாறிருப்பினும் உள்ளூர் நிர்வாகி கோபத்திற்குள்ளாகி எனது பணியை பற்றி எனக்கு தெரியும். நீங்கள் இங்கிருந்து சென்று விடுங்கள் என்று கூறி விட்டார். எவ்வாறிருப்பினும் அந்த மக்கள் மௌனமாகி விட்டனர். மேலும் நீங்கள் பள்ளிவாசலை கட்டுங்கள் என்று அவர்கள் நம்மிடம் கூறினர்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தொண்டுகளினால் நல்ல தாக்கம் நிலைபெற்றுள்ளது. அது, ஜமாஅத்தை பாராட்ட வேண்டுமென்று ஒவ்வொரு அறிவுடையவரையும் நிர்பந்திக்கின்றது. அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக பணி செய்யப்படும்போது பின்னர் அல்லாஹ் உதவியாளர்களின் படையையும் அனுப்பி விடுகின்றான். மேலும் சுயமே எதிரிகளின் தடைகளை நீக்கி விடுகின்றான்.

எவ்வாறு அல்லாஹ்வின் அருள் அதிகரிக்கின்றது? என்பது பற்றி ஒரு சம்பவத்தை கூறி விடுகின்றேன். ஐவெரிகோஸ்ட் மண்டலத்தின் கானாவின் ஒரு அறிக்கை உள்ளது. அவர்கள் கூறுகின்றார்கள்: தப்லீக் தொடர்பான பணிகளின் மூலம் 60 ஐ விட கூடுதலான பைஅத்துகள் கிடைத்தன. கிராமத்தில் ஒரு சிறிய மற்றும் சுடாத செங்கற்களால் கட்டப்பட்ட ஒரு பள்ளிவாசல் ஜமாஅத்திற்கு இருந்தது. நமது வெற்றிகளைப் பார்த்த பிறகு அஹ்மதி அல்லாத முஸ்லிம்கள் முற்றிலும் நமது பள்ளிவாசலுக்கு முன்பாக ஓர் உறுதியான மற்றும் அழகான பள்ளிவாசலை கட்டினர். மேலும் அந்த பள்ளிவாசலின் மூலம் நமது புதிய அஹ்மதிகளை தன் பக்கம் ஈர்ப்பதற்கு முயற்சி செய்தனர். அப்போது சில பலவீனமான புதிய அஹ்மதிகள் அந்தப் பக்கம் சென்று விட்டனர்.

பின்னர் ஜமாஅத் அங்கும் மிகவும் அழகிய பெரிய பள்ளிவாசலை கட்டி விட்டது. தற்போது அல்லாஹ்வின் அருளால் நமது உறுப்பினர்கள் பள்ளிவாசலுக்கு வருகின்றனர். அதுமட்டுமல்ல அஹ்மதி அல்லாதவர்களும் பெரும் எண்ணிக்கையில் அங்கு வரத் தொடங்கி விட்டனர். மேலும் நமது பள்ளிவாசல் தொழுகையாளிகளால் நிறைந்து விட்டது. மேலும் அவர்களின் பள்ளிவாசல் முற்றிலும் காலியாகி விட்டது. அல்லது அங்கு குறைவான மக்களே உள்ளனர். புதிய அஹ்மதிகளின் கல்வி மற்றும் தர்பிய்யத்திற்காக தினமும் அங்கு அல்லாஹ்வின் அருளால் வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. அதன் மூலம் ஜமாஅத்தின் முன்னேற்றம் அனுதினமும் அதிகரித்து வருகின்றது.

அல்லாஹ்வின் அருளால் ஏராளமான சம்பவங்கள் உள்ளன. அல்லாஹ் உண்மையான வாக்குறுதிகளை கொண்டவன் ஆவான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் செய்த தனது வாக்குறுதிகளை அவன் நிறைவேற்றி வருகின்றான். மறைவாக உதவியும் செய்து வருகின்றான். இன்னும் உதவி செய்வான். இன்ஷா அல்லாஹ். நாம் அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசாக ஆகுவதற்கும், அவனது வழியில் அவனது திருப்தியை பெறுவதற்கும் செலவு செய்வதற்கு அவன் நமக்கு வாய்ப்பு வழங்குகின்றான். நாம் அல்லாஹ்வின் அருட்களை ஈர்க்கக் கூடியவர்களாக ஆகி விடுவதற்கு அல்லாஹ் நமக்கு நற்பேறு வழங்குவானாக.

தற்போது நான் மரபுகளுக்கேற்ப கடந்த வருட அதாவது 2021 ஆம் ஆண்டு வக்ஃபே ஜதீத் சந்தாவின் சுருக்கமான அறிக்கையை முன் வைக்கின்றேன். அல்லாஹ்வின் அருளால் கடந்த வருட நிதியாண்டு 64 ஆம் ஆண்டாக இருந்தது. இந்த வருடம் ஜனவரி 2022 ல் புதிய வருடமும் ஆரம்பமாகி விட்டது. எனவே கடந்த வருட அறிக்கை என்னவென்றால், அதில் ஜமாஅத்தின் வக்ஃபே ஜதீதின் தியாகம் என்பது 1,12,70,000 பவுண்ட் அல்லது சுமார் 11.2 மில்லியன் ஆகும். இது முந்தைய ஆண்டை காட்டிலும் இந்த (முறை) பொருள் தியாகம் 7,42,000 பவுண்ட் கூடுதலாகும்.

உலகின் பொருளாதார நிலைமைகளை பார்த்தால் இது அல்லாஹ்வின் மாபெரும் அருளாகும். இந்த வருடமும் ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் பிரிட்டன் ஜமாஅத் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. பாகிஸ்தானின் கரன்ஸி வீழ்ச்சி அடைந்துள்ளதால் அவர்களின் இடம் கீழே சென்று விட்டது. அதன் பிறகும் தமது ஆற்றலுக்கேற்ப மிக அதிக பொருள் தியாகம் செய்துள்ளனர். எவ்வாறிருப்பினும் பட்டியலில் பிரிட்டன் முதல் இடத்தில் உள்ளது. அடுத்து ஜெர்மனி உள்ளது. அல்லாஹ்வின் அருளால் பிரிட்டன் இந்த வருடம் மிக நல்ல பொருள் தியாகம் செய்துள்ளது. ஜெர்மனி மற்றும் பிரிட்டனுக்கு இடையே நிறைய வித்தியாசம் உள்ளது. மூன்றாவது இடத்தில் கனடா உள்ளது. பின்னர் அமெரிக்காவும், இந்தியாவும், ஆஸ்திரேலியாவும், இந்தோநேஷியாவும், மத்திய கிழக்கு நாட்டைச் சார்ந்த ஒரு ஜமாஅத்தும், கானாவும், பெல்ஜியமும் இடம் பெற்றுள்ளன.

தனி நபர் சந்தா செலுத்துவதன் அடிப்படையில் முதலிடத்தில் அமெரிக்கா உள்ளது. பின்னர் சுவிட்சர்லாந்து உள்ளது. அதன் பிறகு பிரிட்டன் உள்ளது.

ஆப்ரிக்காவின் ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் முக்கிய இடங்களைப் பெற்ற ஜமாஅத்துகள் இவையாகும்: முதலிடம் கானா, இரண்டாம் இடம் மொரிஷியஸ், அடுத்து முறையே நைஜீரியா, புர்கினோஃபாஸோ, தன்ஸானியா, சிராலியோன், லைபீரியா, கேம்பியா, யுகண்டா, கடைசி பத்தாவது இடத்தில் பெனின் உள்ளது.

அல்லாஹ்வின் அருளால் இதில் பங்கு பெற்றவர்களின் எண்ணிக்கை 14,45,000 ஆகும்.

வசூலின் அடிப்படையில் பிரிட்டரின் பத்து ஜமாஅத்துகள் விவரம் இவ்வாறாகும்: அவர்களின் நிலை கீழ்க்கண்டவாறு: முதலிடத்தில் இஸ்லாமாபாத், இரண்டாம் இடம் Farnham பின்னர் முறையே Worcester Park, South Cheam, Aldershot, Birmingham-South, Walsall, Gillingham. Guildford, Ewell ஜமாஅத்துகள்.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் முதல் ஐந்து மண்டலங்கள் இவ்வாறாகும்: அதில் முதலிடம் பைத்துல் புதூஹ் ரீஜன் ஆகும். இரண்டாம் இடம் இஸ்லாமாபாத், மூன்றாம் இடம் மஸ்ஜிது ஃபஸல், நான்காம் இடம் பைத்துல் இஹ்ஸான், ஐந்தாம் இடம் மிடிலாண்ட்ஸ்.

அத்ஃபால்: அத்ஃபால் ஏடுகளின் அடிப்படையில் முதல் பத்து ஜமாஅத்துகள் கீழ்க்கண்டவாறு ஆகும்: இஸ்லாமாபாத், Aldershot, Farnham, Roehampton, Guildford, Ewell, Mitcham Park, Baitul Futuh, Walsall, Birmingham-West.

வசூலின் அடிப்படையில் ஜெர்மனியின் ஐந்து உள்ளூர் அமாரத் ஜமாஅத்துகள்: Humburg, Frankfurt, Gros Gerau, Wiesbaden, Diefzenbach.

வசூலின் அடிப்படையில் முதல் பத்து ஜமாஅத்துகளின் பட்டியல்: Rodermark, Rodgau, Neuss, Rodersheim, Frankenthal, Koblenz, Nidda.

அத்ஃபால் ஏடுகளின் முதல் ஐந்து மண்டலங்கள் இவையாகும்: Hamburg, South West Hessen, Taunsus, Hessen-Mitte, Rheinland-Pfalz.

வசூலின் அடிப்படையில் கனடாவின் முதல் ஐந்து அமாரத் ஜமாஅத்துகள் இவையாகும்: அவற்றில் முதலிடம் பேவான் ஆகும். அடுத்து முறையே Calgary, Peace Village, Vancouver, Brampton-West.

அடுத்து கனடாவின் முதல் பத்து ஜமாஅத்துகள் இவையாகும்: அதில் முதலிடம் ஹதீகா அஹ்மது ஆகும். பின்னர் முறையே Milton-West, Bradford, Durham, Milton East, Regina, Ottawa-West, Winnipeg,

Hamilton Mountain, Abbotsford.

அத்ஃபால் ஏடுகளின் முதன்மையான அமாரத்துகள்: Vaughan, Peace Village, Calgary, Toronto-West, Brampton-West.

மேலும் அத்ஃபால் ஏடுகளின் முதல் ஐந்து ஜமாஅத்துகளின் விவரங்கள்: முதலிடம் ஹதீகா அஹ்மது. பின்னர் முறையே Bradford, Durham, London, Milton-West ஜமாஅத்துகள்.

அமெரிக்காவின் வசூலின் அடிப்படையில் முதல் பத்து ஜமாஅத்துகள் இவையாகும்: Maryland, Los Angeles, Detroit, Silicon Valley, Boston, Aston, Phoenix, Syracose, Las Vegas, Fitchburg.

அத்ஃபால் ஏடுகளின் அடிப்படையில் முதல் பத்து ஜமாஅத்துகள்: Maryland, Los Angeles, Seattle, Oriando, Aston, Silicon Valley, Phoenix, Fitchburg, Las Vesgas, zion.

பாகிஸ்தானில் பெரியவர்களின் சந்தாவின் அடிப்படையில் முதல் மூன்று ஜமாஅத்துகள் இவ்வாறாகும்: லாஹூர், ரப்வா, கராச்சி.

மாவட்டங்களின் நிலை இவ்வாறாகும்: இஸ்லாமாபாத், ஃபைஸலாபாத், குஜராத், குஜ்ரான்வாலா, சர்கோதா, முல்தான், உமர்கோட், ஹைதராபாத், மீர்பூர்காஸ், டேராகாஸி கான்.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் முதல் பத்து ஜமாஅத்துகள் இவ்வாறாகும்: இஸ்லாமாபாத் நகரம், டிஃபன்ஸ் லாஹூர், டவுன்ஷிப் லாஹூர், கராச்சி கில்ஃப்டன், லாஹூர் தாருஸ் ஸிக்ர், லாஹூர் மாடல் டவுண், கராச்சி குல்ஷனாபாத், லாஹூர் ஸிமன் ஆபாத், கராச்சி அஸீஸாபாத், லாஹூர் அல்லாமா இக்பால் டவுண்.

அத்ஃபால் அலுவலக ஏட்டின் அடிப்படையில் மூன்று பெரிய ஜமாஅத்துகள் இவ்வாறாகும்: லாஹூர், கராச்சி, ரப்வா.

அத்ஃபால் ஏடுகளில் மாவட்டங்களின் நிலை இவ்வாறாகும்: இஸ்லாமாபாத், சியால்கோட், ராவல்பிண்டி, சர்கோதா, பைஸலாபாத், குஜ்ராத், ஹைதிராபாத், மீர்பூர்காஸ், உமர் கோட், நாரோவால்.

அசாதாரண முயற்சிகள் செய்யக்கூடிய ஜமாஅத்துகள்: கராச்சி டர்குரோட், லாஹூர் நூர்பூரா, குஜ்ரான்வாலா நகரம், பைஸிலாபாத் பைத்துல் ஃபஸல், பெஷாவர் நகரம், லாஹூர் தில்லி கேட், கோட்லி காஷ்மீர், நன்கானா சாஹிப்.

இந்தியாவின் முதல் பத்து மாநிலங்கள்: கேரளா, ஜம்மு காஷ்மீர், தமிழ்நாடு, தெலுங்கானா, கர்நாடகா, ஒடிசா, பஞ்சாப், வெஸ்ட் பெங்கால், தில்லி, மகாராஷ்டிரா.

வசூலின் அடிப்படையில் பத்து ஜமாஅத்துகள்: ஹைதிராபாத், காதியான், கருளாய், பத்தபிரியம், **கோயம்புத்தூர்**, பங்களூர், கொல்கத்தா, கோழிக்கோடு, ரிஷிநகர், **மேலப்பாளையம்.**

ஆஸ்திரேலியாவின் முதல் பத்து ஜமாஅத்துகள்: Melbourne Langwarrin, Castle Hill, Marsden Park, Adelaide South, Melbourne Berwick, Perth, Penrith, Adelaide West, Logan East.

ஆஸ்திரேலியாவின் முதல் பத்து ஜமாஅத்துகள்: Melbourne Langwarrin, Castle Hill, Marsden Park, Adelaide South, Melbourne Berwick, Perth, Penrith, Adelaide West, Blacktown, Canberra.

ஆஸ்திரேலியாவின் அத்ஃபால் ஏடுகளின் முக்கிய ஜமாஅத்துகள்: Melbourne Langwarrin, Adelaide South, Melbourne Berwick, Logan East, Perth, Castle Hill, Melbourne East, Mount Druitt, Penrith, Brisbane Central.

இது அவர்களின் நிலைகளாகும். அல்லாஹ் பொருள் தியாகம் செய்யக் கூடிய அனைவரின் வாழ்நாளிலும், செல்வத்திலும் எல்லையற்ற அருளை வழங்குவானாக.

தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

......☆......☆......☆......

*(10 வது பக்கத்தின் தொடர்ச்சி... ஜுமுஆ குத்பா)*

மற்றொரு பக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டை முற்றுகையிட்டிருந்த மக்கத்து குரைஷிகள் ஒரு நபரிடம் இங்கே ஏன் நிற்கின்றீர்? என்று கேட்டனர். அதற்கு நான் முஹம்மது (ஸல்) அவர்களை வீதிகளில் கடந்து செல்வதைப் பார்த்தேன் என்று அவர் கூறியபோது அவர்கள் அந்த நபரை எள்ளி நகையாடியவாறு அவர் உள்ளே தமது படுக்கையில் இருக்கின்றார். நாங்கள் தொடர்ந்து அவரை கண்காணித்து வருகின்றோம் என்று கூறினர். பின்னர் இரவு கடந்தது. ஏற்கனவே தீட்டியிருந்த திட்டத்திற்கேற்ப திடீரென அவர்கள் உள்ளே சென்றார்கள். போர்வையை இழுத்து தூங்கியவரைப் பார்த்தபோது அவர் ஹஸ்ரத் அலி (ரலி) ஆவார்கள் என்பதை அவர்கள் கண்டு கொண்டனர். முஹம்மது (ஸல்) எங்கே? என்று அன்னாரிடம் அவர்கள் கேட்டார்கள். எனக்குத் தெரியாது என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அப்போது இணை வைப்பவர்கள் அன்னாரை ஏசிப் பேசினர். மேலும் அடித்தனர். மேலும் சிறிது நேரம் கட்டி வைத்த பிறகு அன்னாரை விட்டு விட்டார்கள். எவ்வாறிருப்பினும் இந்த அறிவிப்பிற்கேற்ப அந்த மக்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை ஏசிப் பேசி, அடித்து உதைத்து விட்டு அங்கிருந்து ஆக்ரோஷம் மற்றும் கோபத்தின் நிலையில் திரும்பி வந்தனர். மேலும் மக்காவின் ஒவ்வொரு தெருவிலும் மற்றும் ஒவ்வொரு வீட்டிலும் அன்னார் (ஸல்) அவர்களை தேடத் தொடங்கினர்.

(தாரீக் அல்கமீஸ் தொகுதி 2 பக்கம் 10 – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதற்கிடையே அந்த மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிற்கும் வந்தனர். ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்களை கண்டனர். அபூஜஹில் முன்னால் சென்றான். உனது தந்தை அபூபக்ர் எங்கே? என்று கேட்டான். அவர் எங்கே உள்ளார் என்று எனக்குத் தெரியாது என்று அன்னார் கூறினார்கள். அப்போது தீய இயல்பு படைத்த அபூஜஹில் தனது கையை உயர்த்தி வேகமாக ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்களின் முகத்தில் அறைந்தான். அதனால் அன்னார் காதில் அணிந்திருந்த தோடு கீழே விழுந்தது. பின்னர் கோபத்தின் நிலையில் அவர்கள் அனைவரும் திரும்பிச் சென்று விட்டனர்.

(அஸீரத்துன் நபவிய்யா லி இப்னீ ஹிஷாம் பக்கம் 344 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மக்காவில் தேடுதல் வேட்டையில் தோல்வியுற்றபோது கால்களின் தடத்தை வைத்து தேடும் நிபுணர்களை மக்காவின் நாலா புறமும் அனுப்பி வைத்தனர். மக்காவின் தலைவரான உமைய்யா பின் ஹல்ஃப் சுயமே ஒரு நிபுணத்துவம் பெற்ற துப்பறிவாளனை அழைத்துக் கொண்டு தனது நண்பர்களுடன் ஒரு திசையை நோக்கி புறப்பட்டான். அந்த துப்பறிவாளர் உள்ளபடியே நிபுணராக இருந்தார் என்பதில் எந்த ஐயமும் இல்லை. அவரது நிபுணத்துவத்தை எவ்வளவு பாராட்டினாலும் அது குறைவே. ஏனென்றால் அந்த ஒரே தனித்த துப்பறிவாளர் எப்படிப்பட்டவராக இருந்தார் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதங்களின் ஒவ்வொரு அடியையும் வைத்து தெளிவாக தவ்ர் குகையின் வாசல் வரை வந்தடைந்து விட்டான். மேலும் முஹம்மது (ஸல்) அவர்களின் பாதங்களின் அடையாளம் இங்கு வரை தான் உள்ளது. இதற்கு முன்னால் அன்னார் செல்லவில்லை என்று கூறினான்.

அல்லாமா பலாஸரி அவர்கள் அந்த துப்பறிவாளரின் பெயர் அலிகா பின் குர்ஸ் என்று கூறுகின்றார்கள். மேலும் மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்தின்போது அவர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டதாகவும் எழுதப்பட்டுள்ளது. தவ்ர் குகையின் வாசலில் இந்த மக்கள் நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தனர். ஹிஜ்ரத் செய்யக் கூடிய அவர்கள் சரியாக அதே குகையில் ஒளிந்திருக்க மட்டுமில்லை. மாறாக, அந்த மக்களின் பேச்சுக்களையும் கேட்டுக் கொண்டிருந்தனர். இன்னும் கூறப்போனால், நான் அவர்களின் கால்களையும் பார்த்துக் கொண்டிருந்தேன். இறைவன் மீது ஆணையாக! அவர்களில் ஒருவர் கூட உள்ளே எட்டிப் பார்த்திருந்தால் நாங்கள் பிடிக்கப்பட்டிருப்போம் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஆனால் அபாயம் மற்றும் துன்பத்தின் அந்த நேரத்தில் அந்த இருவரும் தனித்தவர்களாக இருக்கவில்லை. மாறாக, மூன்றாவதாக அவர்களுடன் இறைவன் இருந்தான். அவனது வல்லமையின் ஆதிக்கத்தில் தான் வானமும், பூமியும் உள்ளது. அவன் வல்லமை பொருந்திய இறைவன் ஆவான்.

(சுபுலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 3 பக்கம் 241 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அந்த இறைவன் ஒரு பக்கம் அந்த துப்பறிவாளர்கள் வருவதற்கு முன்பாக அங்கு தனது அற்புதமான வல்லமையால் ஒரு செடியை வளரச் செய்தான். சிலந்தியை அனுப்பி குகையின் வாசலில் ஒரு வலையை கட்டச் செய்தான். மேலும் புறாக்களின் ஒரு ஜோடியை அனுப்பினான். அங்கு அவை தனது கூட்டை கட்டி முட்டையும் இட வேண்டும் என்று அனுப்பி வைத்தான். இவ்வாறு அறிவிப்பில் உள்ளது.

(அல்மவாஹிப் லித்துன்யா... தொகுதி 1 பக்கம் 292, 293 – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இதன் பிறகு அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எவ்வாறு ஆறுதல் வழங்கினான்? அல்லது இந்த அனைத்து விஷயங்களையும் பார்த்த பிறகு அல்லாஹ்வின் கட்டளையால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எவ்வாறு ஆறுதல் வழங்கினார்கள்? என்ற நற்குறிப்பு எதிர்வரும் நாட்களில் நடைபெறும் இன்ஷா அல்லாஹ்.

தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 டிசம்பர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **24 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

ஹிஜ்ரத்தின் இந்த பயணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த வசனத்தை மீண்டும் மீண்டும் ஓதிக் கொண்டே சென்று கொண்டிருந்தார்கள்.

وَقُلْ رَّبِّ اَدْخِلْنِیْ مُدْخَلَ صِدْقٍ
وَّ اَخْرِجْنِیْ مُخْرَجَ صِدْقٍ وَّ اجْعَلْ
لِّیْ مِنْ لَّدُنْكَ سُلْطٰنًا نَّصِیْرًا

பொருள்: நீர் கூறுவீராக! என் இறைவா! என்னை (மீண்டும் மக்காவிற்குள்) நல்ல முறையில் நுழையச் செய்வாயாக. நற்பெயரை விட்டுச் செல்லும் வகையில் மக்காவிலிருந்து என்னை வெளியேறச் செய்வாயாக. மேலும் உன்னிடமிருந்து எனக்கு உதவியாளராகவும், சாட்சியாகவும் விளங்கும் ஒருவரை நியமிப்பாயாக. (17:81)

(அலி முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய கலீஃபத்துல் அவ்வல் அபூபக்ர் என்ற நூல் பக்கம் 47 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபத்தில் அச்சிடப்பட்டது)

அதேபோன்று கீழ்க்கண்ட இந்த துஆவை செய்ததாகவும் குறிப்பு கிடைக்கின்றது.

பொருள்: என்னைப் படைத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். நான் ஒன்றுமற்றவனாக இருந்தேன். அல்லாஹ்வே! உலகத்தின் அச்சத்திலும், துன்பத்தின் காலத்திலும், இரவு மற்றும் பகலின் துன்பத்திலும் நீ எனக்கு உதவி செய்வாயாக. அல்லாஹ்வே! எனது பயணத்தில் நீயே எனக்கு நண்பனாகி விடுவாயாக. நீ எனது குடும்பத்தினர்களுக்கு எனது பிரதிநிதியாக ஆகி விடுவாயாக. நீ எனக்கு வழங்கியவற்றில் எனக்காக அருள் செய்வாயாக. என்னை உன்னைப் பின்பற்றுபவனாகவே வைப்பாயாக. உனது அழகிய படைப்பில் என்னை உறுதிவாய்ந்தவனாக ஆக்குவாயாக. எனது இறைவனை எனக்கு நேசத்திற்குரியவனாக ஆக்குவாயாக. என்னை மக்களிடத்தில் ஒப்படைத்து விடாதே. நீ பலவீனமானவர்களின் இறைவன் ஆவாய். நீ எனக்கும் இறைவன் ஆவாய். உனது கண்ணியத்திற்குரிய முகத்தைக் கொண்டு எதன் மூலம் வானமும், பூமியும் ஒளிமயமானதோ மேலும் எதனால் இருள் விலகியதோ மேலும் எதன் மூலம் முந்தையவர்கள் மற்றும் பிந்தையவர்களின் விவகாரங்கள் சரியானதோ நான் அவனது அடைக்கலத்தில் வருகின்றேன். என் மீது உனது கோபம் இறங்குவதிலிருந்தும் அல்லது என் மீது உனது அதிருப்தி இறங்குவதிலிருந்தும் நான் அடைக்கலம் தேடுகின்றேன். மேலும் உனது அருட்கொடைகளை வீணாக்குவதிலிருந்தும், உனது தண்டனை திடீரென வருவதிலிருந்தும், எனது தொடர்பான உனது இறுதி தீர்ப்பு மாறி விடுவதிலிருந்தும் நான் உனது அடைக்கலத்தில் வருகின்றேன்.

ஸர்கானி விரிவுரையில் تَحَوُّلِ عَافِيَتِكَ என்ற இடத்தில் تَحَوُّلِ عَاقِبَتِكَ என்ற சொற்கள் வந்துள்ளன. இதன் பொருள் என்னவென்றால், உன்னால் வழங்கப்பட்ட ஆரோக்கியம் வீணாகி விடுவதிலிருந்தும், எல்லா வகையான உனது கோபத்திலிருந்தும் நான் உன்னிடத்தில் பாதுகாப்பு தேடுகின்றேன் என்பது பொருளாகும். நான் செய்த அனைத்து நன்மைகளிலும் உனது திருப்தியையே நாடுகின்றேன். பாவத்திலிருந்து தப்பிப்பதற்கு எந்த வழியும் இல்லை. நன்மை செய்வதற்கும் எந்த ஆற்றலும் இல்லை. ஆனால் உன் மூலமாக மட்டுமே அது சாத்தியமாகும்.

(சுபுலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 3 பக்கம் 243 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

கானா காபாபிற்கு பின் புறமாக கடந்து செல்லும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவை நோக்கி தமது அருளுக்குரிய முகத்தை திருப்பினார்கள். இறைவன் மீது ஆணையாக! மக்காவே! நீ பூமியில் எனக்கு மிகவும் விருப்பத்திற்குரிய இடம் ஆவாய். மேலும் அல்லாஹ்வின் பூமியில் அல்லாஹ்விற்கும் நீ மிகவும் விருப்பத்திற்குரிய இடம் ஆவாய். உனது குடிமக்கள் என்னை பலவந்தமாக இங்கிருந்து வெளியேற்றாவிட்டால் நான் ஒருபோதும் வெளியேறி இருக்க மாட்டேன் என்று அந்த ஊரை நோக்கி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(முஹம்மது ரஸூலுல்லாஹ்... தொகுதி 3 பக்கம் 59)

இமாம் பைஹக்கி அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: தவ்ர் குகையின் பயணத்தின்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சில சமயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் செல்வார்கள். சில முறை பின்னால் செல்வார்கள். சில முறை அன்னார் (ஸல்) அவர்களுக்கு வலப் புறம் செல்வார்கள். சில முறை இடப் பக்கம் செல்வார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அது குறித்து கேட்டபோது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உங்களுக்கு முன்னால் யாரும் வராதபோது நான் உங்களுக்கு முன்னால் வந்து விடுகின்றேன். மேலும் பின்னாலிருந்து யாரும் வந்து தாக்கி விடக் கூடாது என்ற அச்சத்தால் நான் தங்களுக்கு பின்னால் வந்து விடுகின்றேன். சில சமயம் இடப் பக்கமும், வலப் பக்கமும் நான் வந்து விடுகின்றேன். ஏனென்றால் தாங்கள் எல்லா புறமிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(சுபுலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 3 பக்கம் 240 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் தவ்ர் குகையை சென்றடைந்த அந்தப் மலைப் பயணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய பாதம் புண்பட்டு விட்டது.

(முஹம்மது ரஸூலுல்லாஹ்... தொகுதி 3 பக்கம் 59)

மற்றோர் அறிவிப்பிற்கேற்ப வழியில் ஒரு கல் தடுக்கி அன்னாரின் அருளுக்குரிய பாதங்கள் காயமடைந்தன.

(தாரீக் தப்ரி தொகுதி 1 பக்கம் 568 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தவ்ர் குகையை அடைந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: தாங்கள் (ஸல்) தற்போது இங்கே அமருங்கள். நான் முதலில் உள்ளே சென்று குகையை நல்ல முறையில் சுத்தம் செய்து விடுகின்றேன். ஆபத்தான பொருள் எதுவும் உள்ளே இருக்குமென்றால் அதனை நான் முதலில் எதிர்கொண்டு விடுகின்றேன் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே அன்னார் (ரலி) உள்ளே சென்றார்கள். குகையை சுத்தம் செய்தார்கள். குகையினுள் இருந்த ஓட்டையையும், பொந்தையும் தமது ஆடையால் அடைத்து விட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உள்ளே வரும்படி அழைத்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தொடையில் தலையை வைத்து படுத்து விட்டார்கள். அப்போது குகையில் ஒரு பொந்து இருந்தது. அதை அடைப்பதற்கு துணி இல்லாமல் இருந்தது. அது அந்த நேரத்தில் தென்படவில்லை. அதனை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது கால்களை வைத்து அடைத்து விட்டார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. அந்த பொந்திலிருந்து தேள் அல்லது பாம்பு போன்ற ஒன்று கடித்துக் கொண்டிருந்தது. ஆனால் ஏதாவதொரு அசைவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஓய்வில் பாதிப்பை ஏற்படுத்தி விடும் என்ற அச்சத்தால் அன்னார் அசையவே இல்லை. எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்கள் திறந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் முகத்தில் ஏற்பட்டிருந்த மாற்றத்தைக் கண்டு என்ன ஆகிவிட்டது? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அப்போது அன்னார் (ரலி) அவர்கள் நடந்த அனைத்தையும் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரிய உமிழ்நீரை அதில் தடவினார்கள். பின்னர் எதுவுமே நடக்காததுபோன்று பாதம் ஆகி விட்டது.

(ஷரஹ் ஸர்கானீ தொகுதி 2 பக்கம் 121 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

*(தொடர்ச்சி 9 வது பக்கம்...)*

## ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் இந்தோனேஷிய குத்தாமுல் அஹ்மதிய்யா தேசிய செயற்குழுவின் மெய்நிகர் சந்திப்பு மற்றும் ஹுஸூர் அவர்களின் பொன்னான அறிவுரைகள்

மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா இந்தோநேஷியாவின் தேசிய செயற்குழு உறுப்பினர்களுக்கு அன்பிற்குரிய எஜமானர் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் 18 ஏப்ரல் 2021 ஆம் ஆண்டு மெய்நிகர் சந்திப்பு நிகழ்த்துவதற்கு நற்பேறு கிடைத்தது.

இந்த சந்திப்பிற்காக அனைத்து தேசிய செயற்குழு உறுப்பினர்களும் ரஹ்மத் அலி ஹால், மஸ்ஜிது ஹிதாயத்தில் மத்திய ஜகார்தாவில் ஒன்று கூடி இருந்தனர். அதே நேரம் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இஸ்லாமாபாத் யூ.கே–விலிருந்து இந்த சந்திப்பு நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் துஆவுடன் இந்த சந்திப்பை ஆரம்பித்தார்கள். அதன் பிறகு ஒவ்வொரு தொண்டரும் தத்தமது அறிமுகத்தை செய்து கொண்டார். மேலும் தமது துறையின் சுருக்கமான அறிக்கையை முன் வைத்தார். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவு கூர்ந்து ஒவ்வொருவருக்கும் சம்பந்தப்பட்ட துறை தொடர்பாக பொன்னான அறிவுரைகளை வழங்கினார்கள்.

மஜ்லிஸ் அன்ஸார் சுல்தானுல் கலம் சத்ர் அவர்களுக்கு கட்டுரைகள் எழுதுவது தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: காதிம்கள் மத சார்பற்ற செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகளில் இஸ்லாமிய போதனைகள் மற்றும் அறிவியல் மற்றும் ஏனைய அறிவார்ந்த ஆராய்ச்சிகள் தொடர்பாக கட்டுரைகள் எழுதுவது தொடர்பாக நீங்கள் கவனமூட்டுங்கள். இதன் மூலம் நீங்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் அறிமுகத்தை ஏனைய மக்களுக்கு செய்து வைக்க முடியும்.

அடுத்து கித்மத்தே கல்க் துறை தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் உங்களது நாட்டின் பல்வேறு பகுதிகளில் இரத்ததானம் செய்கின்ற தன்னார்வலர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். நல்ல வியாபாரம் செய்யக் கூடிய, நல்ல பயிற்சி பெற்ற மற்றும் வேலை வாய்ப்பு கொண்ட காதிம்கள் போதுமான எண்ணிக்கையில் உள்ளனர். எனவே அவர்களிடமிருந்தும் சிறிது தொகையை ஒன்று கூட்டுங்கள். மேலும் உங்களது நாட்டின் ஏழைகளுக்கு மதம் அல்லது பிரிவு என்ற எந்த பாகுபாடுமின்றி உதவி செய்யுங்கள். இன்னும் கூறப்போனால் இந்தோனேஷியாவை விட்டு வெளியில் ஆப்ரிக்கா நாடுகள் வரை கூட அந்த பணிகளை பரந்துபட்டதாக ஆக்குவதற்கு முயற்சி செய்யுங்கள்.

பின்னர் அத்ஃபால் துறையின் முஹ்தமிம் சாஹிப் அவர்களுடன் உரையாடியவாறு இந்தோனேஷியா முழுவதும் உள்ள மஜ்லிஸ்கள் குறித்து ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கேட்டார்கள். அப்போது இந்தோனேஷியாவின் எல்லா மாநிலங்களிலும் மஜ்லிஸ்கள் உருவாகி உள்ளன என்று முஹ்தமிம் சாஹிப் கூறினார். அப்போது நீங்கள் உங்களது ஒவ்வொரு தீவிலும் உங்களது மஜ்லிஸ்களை உருவாக்க வேண்டும் என்றும் ஒட்டுமொத்த இந்தோனேஷியாவிற்கும் இதனை இலக்காக ஆக்க வேண்டும் என்றும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

தப்லீக் துறைக்கு இன்னும் அதிகமாக தப்லீக் செய்யும்படி கூறும் படியும், எல்லா தீவுகள் வரையிலும் சென்றடைய வேண்டுமென்றும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

வெளியீட்டுத்துறை தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: குத்தாமுல் அஹ்மதிய்யாவிற்கென்று ஒரு பத்திரிகை இருக்க வேண்டும். அது அச்சில் இருக்கலாம். அல்லது ஆன்லைன் வடிவில் இருக்கலாம். அது குறைந்தபட்சம் வருடத்தில் 4 முறை வெளியாக வேண்டும். மேலும் அது ஒவ்வொரு காதிமையும் சென்றடைய வேண்டும். அப்போது தான் அவர்களுக்கும் குத்தாமுல் அஹ்மதிய்யா தொடர்பாக தகவல்கள் தெரிய வரும். மேலும் அவர்களின் பணிகள் பற்றியும், அவர்களது பொறுப்புகள் பற்றியும் அவர்களுக்கு தெரிய வரும். மேலும் அது அவர்களின் அறிவை அதிகரித்துக் கொள்வதற்கு காரணியாகவும் அமையும். எனவே அதனை தொடங்குங்கள். மேலும் அந்தப் பத்திரிகைக்கு தாரிக் என்று பெயர் சூட்டுங்கள்.

இந்த சந்திப்பு 1:15 மணி நேரம் வரை நீடித்தது. சந்திப்பின் இறுதியில் நான் உங்களுக்கு கூறியவை உங்களுக்கு போதுமானவை ஆகும். அதன் பக்கம் கவனம் செலுத்தி அதனை செயல்படுத்திக் காட்டுங்கள் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

இதன் பிறகு குத்தாமுல் அஹ்மதிய்யா இந்தோநேஷியாவின் சதர் மதிப்பிற்குரிய முபாரக் அஹ்மது காமில் சாஹிப், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சமூகத்தில் குத்தாமுல் அஹ்மதிய்யா இந்தோநேஷியாவிற்காக துஆ செய்யும்படி விண்ணப்பித்தார்கள். மேலும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்தோநேஷியாவிற்கு வருகை தருவதற்காக இந்தோனேஷிய காதிம்கள் காத்திருக்கின்றார்கள் என்றும் கூறினார்கள். அதற்கு, நல்லது. இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் உங்கள் மீது அருள் செய்யட்டும் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

இதுமட்டுமின்றி இறுதியில் ஸலாம் கூறுவதற்கு முன்பாக மொழிபெயர்ப்பாளர் மதிப்பிற்குரிய முரப்பி ஹிஃப்ஸுர் ரஹ்மான் சாஹிப் அவர்களின் ஆங்கில மொழியாக்கத்தை ஹுஸூர் பாராட்டி கூறினார்கள். மேலும் ஆங்கிலத்தைப் போன்று உருது மொழியையும் சிறப்பாக்கிக் கொள்வதற்கு அறிவுறுத்தினார்கள்.

குத்தாமுல் அஹ்மதிய்யா இந்தோனேஷியாவிற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப மார்க்கத் தொண்டாற்றுவதற்கு அல்லாஹ் நற்பேறு வழங்குவானாக. ஆமீன்.

(அறிக்கை: ஃபஸல் உமர் ஃபாரூக், அல் ஃபஸல் இன்டர்நேஷனல் இந்தோனேஷியாவின் பிரதிநிதி. நன்றி: அல் ஃபஸல் இன்டர்நேஷனல் பத்திரிகை 31 ஏப்ரல் 2021)

---

*(12 வது பக்கத்தின் தொடர்ச்சி... நியூஸிலாந்து சுற்றுப் பயணம்)*

அந்த முயற்சிகளுக்குப் பின்னால் நல்லெண்ணம் இருக்கும். அந்த முயற்சிகளில் ஓரளவிற்கு வெற்றி கிடைப்பதால் நீங்கள் மகிழ்ச்சியும் அடைவீர்கள். கடந்த வருடங்களில் உங்களின் அரசாங்கமும் அமைதி நிறைந்த உலகத்தை நிலைநாட்டுவது தொடர்பாக ஏனைய வல்லரசுகளுக்கு ஆலோசனைகளும் வழங்கி இருக்கலாம்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இன்று உலகின் நிலை மிகவும் அபாயகரமாக ஆகி விட்டது என்பதில் எந்த ஐயமும் இல்லை. உலகின் நிலை முழு உலகத்திற்கும் மிகவும் கவலைக்குரியதாக ஆகிக் கொண்டிருக்கிறது. பெரும் பெரும் பிரச்சனைகள் இன்றைய நாட்களில் அரபு நாடுகளிலும் தலைதூக்கி வருகின்றன. இதுபோன்ற பிரச்சனைகள் அந்தப் பகுதியுடன் மட்டுமே தொடர்புடையதாக இருக்காது என்பதை அறிவுபடைத்த ஒவ்வொரு நபரும் அறிவார். ஓர் அரசாங்கம் மற்றும் அதன் மக்களுக்கு மத்தியிலான பிரச்சனைகள் அதிகரித்து ஓர் உலகளாவிய பிரச்சனையாக அது ஆகிவிடக் கூடும் என்பதிலும் எந்த ஐயமும் இல்லை. வல்லரசுகளின் இரண்டு பிரிவுகள் உருவாகி வருகின்றன என்பதை நாம் அறிவோம். ஒரு பிரிவு, சிரியா அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி வருகிறது. அதே நேரம் மற்றொரு பிரிவு கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக உள்ளது. எனவே இந்த நிலை முஸ்லிம் நாடுகளுக்கும் மட்டும் அபாயகரமானதாக இல்லை. மாறாக, ஏனைய அனைத்து நாடுகளுக்கும் ஒரு மாபெரும் அபாயத்திற்கு காரணியாக உள்ளது என்பது வெளிப்படையாகும். கடந்த நூற்றாண்டில் நிகழ்ந்த முதல் இரண்டு உலகப் போர்களில் கிடைத்த கசப்பான அனுபவங்களை நாம் ஒருபோதும் மறந்து விடக் கூடாது. அந்தப் போர்களில் குறிப்பாக இரண்டாம் உலகப் போரில் நிகழ்ந்த நாசத்திற்கு உதாரணம் கிடைக்க முடியாது. முறையான ஆயுதங்களை பயன்படுத்தியதன் மூலம் மக்கள் தொகை நிறைந்த நகரங்களும், ஊர்களும் முழுமையாக அழிந்து நாசமாகி விட்டன. லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். பின்னர் இரண்டாம் உலகப் போரில் உலகம் ஒரு கொடூரமான காட்சியை கண்டது. ஜப்பானிற்கு எதிராக அதில் அணு குண்டுகள் பயன்படுத்தப்பட்டன.

(தொடரும்...)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS

DOORS & STEELS EXPERT



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 10 February 2022 Issue No. 6

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நியூஸிலாந்து சுற்றுப் பயணம் 2013

### நவம்பர் மாதம் திங்கட்கிழமை 2013

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காலை 5:15 மணிக்கு மஸ்ஜித் பைத்துல் முகீத்திற்கு வருகை தந்து ஃபஜர் தொழுகையை நடத்தினார்கள். ஃபஜர் தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்திற்கு திரும்பிச் சென்றார்கள். பல்வேறு நாடுகள் மற்றும் ஜமாஅத்துகளிலிருந்து கிடைக்கப் பெற்ற அலுவலக தபால்கள், கடிதங்கள் மற்றும் அறிக்கைகளை ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காலையில் படித்தார்கள். மேலும் (உரிய) வழிகாட்டல்களை வழங்கினார்கள்.

### ஆக்லாந்திலிருந்து வில்லிங்டனிற்கு புறப்பாடு

இன்று நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ஆக்லாந்திலிருந்து நியூஸிலாந்தின் தலைநகரான வில்லிங்டனிற்கு புறப்பட வேண்டியதிருந்தது. 8:15 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்திலிருந்து வெளியில் வருகை தந்தார்கள். விமான நிலையத்திற்காக புறப்பட்டார்கள். 8:50 மணிக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் விமான நிலையத்தை வந்தடைந்தார்கள். மேலும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் விமான நிலையத்திற்குள் சென்றார்களள். 9:30 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் விமானத்தில் ஏறி அமர்ந்தார்கள். மேலும் Nz417 என்ற நியூஸிலாந்து ஏல்லைன்ஸ் விமானம் 9:45 மணிக்கு ஆக்லாந்து நகரத்திலிருந்து வில்லிங்டன் நகரத்திற்கு புறப்பட்டது. சுமார் 1 மணி நேரம் பயணத்திற்கு பிறகு 10:45 மணியளவில் விமானம் வில்லிங்டன் சர்வதேச விமான நிலையத்தில் தரை இறங்கியது. விமான நிலையத்தில் வில்லிங்டன் ஜமாஅத்தின் சதர் சாஹிப் தமது உறுப்பினர்களுடன் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை வரவேற்று நல்வரவு கூறினார்கள். வில்லிங்டனில் தற்காலிகமாக தங்குவதற்கு இன்டர்கான்டி நேன்டல் ஹோட்டலில் செய்யப்பட்டிருந்து. விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு 11:15 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹோட்டலிற்கு சென்றார்கள்.

### நியூஸிலாந்து தேசிய பாராளுமன்றத்தில் ஹுஸூர் அவர்களை கவுரவிக்கும் நிகழ்ச்சி

நிகழ்ச்சி நிரலுக்கேற்ப இங்கிருந்து 12:30 மணியளவில் நியூஸிலாந்தின் தேசிய பாராளுமன்றத்திற்கு புறப்பட்டுச் சென்றோம். அங்கு தேசிய பாராளுமன்றத்தில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை கவுரவிக்கும் நிகழ்ச்சி ஒன்றிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 12:40 மணியளவில் தேசிய பாராளுமன்றத்தின் கட்டிடத்தின் வெளிப்பகுதியை சென்றடைந்தபோது பாராளுமன்ற உறுப்பினர் Hon. Kanwaljit Sing Bukshi அவர்கள் வெளியில் வந்து ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை வரவேற்றார்கள். மேலும் நல்வரவு என்று கூறினார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை தம்முடன் பாராளுமன்ற கட்டிடத்திற்கு உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

இன்றைய நிகழ்ச்சி பாராளுமன்ற கட்டிடத்தில் அமைந்துள்ள மிகவும் பெரிய ஹாலான Grand Hall ல் நடக்க இருந்தது. ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வருகை தருவதற்கு முன்பு இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விருந்த விருந்தினர்கள் தத்தமது இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர். பாராளுமன்ற உறுப்பினர்களும், பல்வேறு நாடுகளைச் சார்ந்த தூதுவர்களும், இஸ்ரேல், ஈரான் மற்றும் பிரிட்டனின் தூதரக உயர் அதிகாரிகளும், கியூபன் தூதரக உயர் அதிகாரிகளும், அர்ஜென்டினா அலுவலகத்தின் துணைத் தலைவர் அவர்களும், காவல்துறை அதிகாரிகளும், கவுன்ஸிலர்களும், பல்கலைக்கழகங்களின் பல்வேறு பேராசிரியர்களும் அதில் கலந்து கொண்டனர்.

திருக்குர்ஆன் திலாவத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. நியூஸிலாந்தின் முபல்லிக் மதிப்பிற்குரிய ஷஃபீகுர் ரஹ்மான் சாஹிப் திருக்குர்ஆன் ஓதினார்கள். அதன் பிறகு ஆங்கிலத்தில் அதன் மொழியாக்கம் வாசிக்கப்பட்டது. அதன் பிறகு நியூஸிலாந்து ஜமாஅத்தின் தலைவர் மதிப்பிற்குரிய முஹம்மது இக்பால் சாஹிப் தனது அறிமுக உரையை நிகழ்த்தினார்கள். அதன் பிறகு 12:50 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆங்கிலத்தில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

### ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நியூஸிலாந்து பாராளுமன்றத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு. உங்கள் அனைவரின் மீதும் அல்லாஹ் அருள் செய்வானாக. இந்த சந்தர்ப்பத்தில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த அனைத்து மக்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். எனக்கு உங்களிடம் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக, எனது கூற்றை கேட்பதற்காக இங்கு வருகை தந்துள்ள மக்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

பாலிஸிகளை நிர்ணயிப்பதற்கும், திட்டங்களை தீட்டுவதற்கும், சட்டங்களை செயல்படுத்துவதற்கும் இந்தப் பாராளுமன்றத்தில் பல்வேறு அரசியல்வாதிகளும், பாராளுமன்ற உறுப்பினர்களும் முறையாக சந்தித்து வருகின்றனர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. சமுதாயத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே அதன் நோக்கமாகும். அதுமட்டுமின்றி ஏராளமான உலகத் தலைவர்களும் அல்லது மத சார்பற்ற தலைவர்களும் இங்கு வந்திருப்பார்கள் என்று நான் கருதுகின்றேன். மேலும் அவர்கள் தமது அறிவு, திறமை மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் உங்களிடம் சொற்பொழிவாற்றி இருப்பார்கள். இருந்தபோதிலும் மார்க்க அமைப்பைச் சார்ந்த அதுவும் குறிப்பாக முஸ்லிம்களின் ஒரு தலைவர் உங்களிடம் சொற்பொழிவாற்றுவது மிக அரிதாகவே இருந்திருக்கும்.

எனவே முற்றிலும் இஸ்லாமிய ஜமாஅத்தான அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நோக்கம் இஸ்லாமிய போதனைகளை பரப்ப வேண்டும் என்பதாகும். அதன் உலகளாவிய தலைவர் என்ற ரீதியில் உங்களுக்கு முன் சொற்பொழிவாற்றுவதற்கு எனக்கு தரப்பட்டுள்ள வாய்ப்பு உங்கள் அனைவரின் பரந்த உள்ளத்திற்கும், மத நல்லிணக்கத்தின் உயர்தரத்திற்கும் அடையாளமாக உள்ளது. எனவே உங்களின் இந்த உதவிக்காக உங்கள் அனைவருக்கும் நன்றி செலுத்துவது எனது கடமை ஆகும்.

இஸ்லாத்தின்படி இறை படைப்பினத்திற்கு செலுத்துகின்ற நன்றி அல்லாஹ்விற்கு செலுத்துகின்ற நன்றியாக அமைகின்றது. இந்த அடிப்படையிலும் நான் நன்றி செலுத்துவது அவசியமாகும். அல்லாஹ்விற்கு நன்றியுடையவராக இருப்பது அல்லது பிறருக்கு மதிப்பளிப்பதாக இருப்பது என்பது இறைவனது கருணைகளையும், அருட்களையும் பெறுவதற்கு காரணியாகும் என்பது எனது ஈமான் ஆகும். நன்றியுணர்விற்கான இந்த சொற்களுடன் நான் தற்போது எனது சொற்பொழிவின் அசல் பகுதியின் பக்கம் வருகின்றேன். இஸ்லாத்தின் அழகிய போதனைகள் தொடர்பாக சில விஷயங்களை நான் கூறுகின்றேன்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: எனது பார்வையில் இந்தக் காலத்தின் முக்கிய தேவையாக இருக்கின்ற விவகாரத்தைக் குறித்து நான் பேசுவேன். அது என்னவென்றால், உலகில் அமைதியை நிலைநாட்டுவதாகும். உலக அடிப்படையில் பார்ப்பதாக இருந்தால் உங்களில் ஏராளமான அரசியல்வாதிகள் தனிப்பட்ட முறையிலும், அரசாங்க ரீதியிலும், ஒட்டுமொத்த அளவிலும் அமைதியை நிலைநாட்டுவதற்காக முயற்சி செய்து வருகின்றீர்கள். உங்கள் அனைவரின்

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad